# எதிரொலி

ஆஸ்திரேலியா


ETHIROLI

குரல் 04 அதிர்வு 47 மே 2021 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162
















ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day
bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


NEW HOMES
MULTI UNIT DEVELOPMENTS
KNOCK DOWN AND REBUILD
EXTENSIONS
FOR MORE DETAILS:
1300 01 72 72 OR 0405 079 438
INFO@PARACONSTRUCTIONS.COM.AU
WWW.PARACONSTRUCTIONS.COM.AU
PARA Constructions
VBA VICTORIAN BUILDING AUTHORITY
REGISTERED Building Practitioner
MASTER BUILDERS VICTORIA

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# அகால வேளையிலும் ஆரோக்கிய அறிகுறிகள்



# ஆஸி. வரவு-செலவு திட்டத்தில் எதிர்பார்ப்புகள்

பேரிடர் காலத்தில் ஆட்சிபுரிவது என்பது மிகப்பெரிய சோதனை. அந்தவகையில், ஆஸ்திரேலியாவில் பெரும் ஆர்ப்பாட்டத்தோடு ஆட்சிக்கு வந்த லிபரல் கட்சி, கதிரையில் ஏறிய நாள்முதல், கொத்து கொத்தாக பிரச்சினைகள் மொறிஸன் அரசை சுழற்றியடித்துக்கொண்டேயிருக்கின்றன. காட்டுத்தீயில் ஆரம்பித்த பிரச்சினை இன்றுவரைக்கும் ஆஸ்திரேலியாவை பிடரியில் பிடித்து ஆட்டிக் கொண்டேயிருக்கிறது.

இந்த பேரிடர் சூழலுக்கு எதிராக - பெரும் அழுத்தத்திற்கு எதிராக - ஆஸ்திரேலியா அரசு மேற்கொண்டுவரும் ஆட்சியின் கிரீடம்போல அதன் வரவு - செலவுத்திட்டத்தை இந்த ஆண்டு முழு நாடும் எதிர்பார்த்தது.

கோவிட்டுக்கு எதிரான நடவடிக்கையில் ஆஸ்திரேலிய அரசுக்கு பல்வேறு திசைகளிலிருந்து புகழ்மாலைகள் வந்து விழுந்தாலும், அப்படியானதொரு நிர்வாகத்தை தொடர்ந்து நடத்துவது என்பது சுலமான ஒன்றில்லை. கிருமியை வாசலில் நிறுத்திவைத்துக்கொண்டு, நாட்டை தொடர்ந்தும் சாந்தி - சமாதானத்தோடு ஆட்சிசெய்வது என்பது எந்த அரசுக்கும் பயங்கரமானதே ஆகும்.

அந்தவகையில், கோவிட் கால நிர்வாகத்தில் மொறிஸன் அரசு மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், ஆஸ்திரேலியாவை மிகப்பெறுமதியாக பேணிக்கொண்டது என்று கூறலாம். பெருந்தொற்றுக்காலத்தில் வேலைவாய்ப்புக்களை இழந்தவர்களுக்கு உதவு தொகைகயை வழங்கியது, வெளிநாட்டு மாணவர்கள் உட்பட தற்காலிக விஸாவிலிருந்தவர்களுக்கு உரிய தேவைகளை வழங்கியது, நாட்டின் பொருளாதாரம் ஒரேயடியாக அதல பாதாளத்தில் வீழ்ந்து விடாமல், பலதுறைகளையும் தாங்கிக்கொண்டது என்று வரிசையில் நிதானமாகவும் பொறுப்பாகவும் நடந்துகொண்டது.

கோவிட் தொற்றினை - ஆச்சரியமளிக்கும் வகையில் - நாட்டில் முற்றாக ஒழித்துக்கட்டிய மொறிஸன் அரசுக்கு, தற்போது கைகளில் உள்ள மிகப்பெரிய இரண்டு பிரச்சினைகள் -

ஒன்று - வெளிநாட்டு பயணங்களுக்காக விமான நிலையங்களை எப்போது திறப்பது

இரண்டு - தடுப்பூசியை நாட்டு மக்கள் அனைவருக்கும் வழங்குவது.

தடுப்பூசியை நாட்டு மக்களுக்கு வழங்குவது விடயத்தில் அரசாங்கம் தொடர்ந்தும் சவால்களை எதிர்கொண்டு வருகிறது. தடுப்பூசிகளால் ஏற்படும் விளைவுகளை ஒவ்வொரு கணமும் மக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கண்டும் கேட்டும் பீதியடைந்துவருகிறார்கள். இந்த தடுப்பூசிகளில் இவ்வளவு பிரச்சினைகள் இருக்கும்போது - உயிரையே காவுகொள்ளும் சிக்கல் இருக்கும்போது - வராத நோயிற்கு ஏன் தடுப்பூசியை போடவேண்டும் என்ற பின்னடிப்பு நாட்டு மக்களில் பலருக்கு ஏற்பட்டுள்ளது.

பிரதமர் முதற்கொண்டு பலர் தடுப்பூசியை போட்டுக்கொண்டு, நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டாக ஊசிக்கு நேராக முஷ்டியை மடக்கிப்பிடித்து காண்பித்தாலும், மக்களுக்கு இந்த தடுப்பூசியில் முழுமையான நம்பிக்கை இன்னுமும் ஏற்படவில்லை என்பதுதான் உண்மை.

இவை எல்லாவற்றிலும் பார்க்க முக்கிய விடயமாக, நாட்டின் வரவு - செலவுத்திட்டம் அண்மையில் நாடாளுமன்றத்தில் அரங்கேறியது.

கருவூலக்காப்பாளர் ஜோஷ் பிரைடெண்பேர்க் முன்வைத்த இந்த வரவு - செலவுத் திட்டமானது அடுத்த ஒரு வருடத்திற்கு மாத்திரமல்லாமல் அதற்கு அப்பாலும் - பேரிடரை எதிர்கொள்ளப் போகும் - ஆரோக்கியமானதாகவே பாராட்டப்படுகிறது.

இம்முறை வரவு - செலவு திட்டத்தின் மிக முக்கிய அம்ஸமாக அரசாங்கம் கோவிட் தடுப்பூசிக்கான நிதி ஒதுக்கீட்டினை மேற்கொண்டுள்ளது. தடுப்பூசியை உள்நாட்டில் தயாரிப்பதற்கு முதலில் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தபோதும், நாட்டு மக்களின் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கான நீண்டகாலப் பொறிமுறையை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, வலுவான தடுப்பூசியை உள்நாட்டில் தயாரிப்பதற்கு, அடுத்த ஐந்து வருடங்களுக்கு 1.9 பில்லியன் டொலர்கள் ஒதுக்கீடு செய்வதாக இந்த வரவு - செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட, கோவிட் தொற்று தொடர்பான சோதனைகள், தொற்று ஏற்படும்பட்சத்தில் அது நுழைந்த இடத்தை தேடிக்கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு 1.5 பில்லியன் டொலர்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதைவிட, நாட்டின் அபிவிருத்திக்கான அணுகுமுறைகளை மிகக்கவனமாக கருத்திலெடுத்துள்ள அரசு - அடுத்த நிதியாண்டு முழுவதும் - உள்நாட்டு உற்பத்தி மற்றும் சேவைகளை கருத்திற்கொண்டுதான் நிதி ஒதுக்கீடுகளை செய்திருக்கிறது.

குழந்தைகள் பராமரிப்பு, முதியோர் பராமரிப்பு ஆகிய துறைகளுக்கு இந்த வரவு - செலவுத்திட்டத்திலும் அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது. முதியோர் பராமரிப்புக்கு அடுத்த ஐந்து வருடங்களுக்கு சுமார் 17.7 பில்லியன் டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அதேவேளை, சிறுவர் பராமரிப்புக்கு அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு - கடந்த வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டதிலும் மேலதிகமாக 1.7 பில்லியன் டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறை வரவு - செலவுத்திட்டத்திலும் பெண்கள் மிகப்பெரிய அளவில் நலன்களை பெற்றுள்ளார்கள் என்று கூறலாம். மார்பக புற்றுநோய் சோதனை, கர்ப்பிணிகளுக்கான உதவிகள், வீட்டு வன்முறைகளினால் பாதிக்கப்படும் பெண்களுக்கான உதவி, உளவள மேம்பாடு என்று ஏகப்பட்ட விடயங்களில் பெண்களுக்கு இந்த வரவு - செலவுத்திட்டம் பெருந்தொகை பலன்களை நல்கியிருக்கிறது.

வழக்கம்போல இம்முறையும் மனநலத் துறையில் அரசு அதிக கவனம் செலுத்தியுள்ளது. ஐந்து முக்கிய துறைகளுக்கு மொத்தம் 2.3 பில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்கொலையிருந்து பாதுகாத்தல், பூர்வீக குடிகளின் உளவள மேம்பாடு உட்பட பல விடயங்களில் விசேட கவனம் செலுத்தியுள்ள அரசு, சரியான நேரத்துக்கு உணவு உட்கொள்ளாத பிரச்சினையால் அவதிப்படுபவர்களின் உளநலத்திற்குக்கூட அதிக கவனம் செலுத்தி விசேட நிதி ஒதுக்கீட்டினை மேற்கொண்டுள்ளது.

அடுத்த ஒரு வருடத்தை கோவிட் எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கப் போகிறது என்ற அச்சம் இன்னமும் தீரவில்லை என்பதால், வெளிநாட்டு சுற்றுலாத்துறைக்கான நிதி ஒதுக்கீடுகளில் அரசு அதிக கவனம் செலுத்தவில்லை.

மாறாக, உள்நாட்டு சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு பல வழிகளை காட்டியிருப்பது மாத்திரமல்லாமல், அதற்கான உதவிகளையும் வழிமொழிந்திருக்கிறது. குறிப்பாக, இணைய விளையாட்டுப்பொருட்களை விற்பனை செய்பவர்களுக்கு வரி விலக்கு அளிக்கும் அறிவிப்பை விடுத்துள்ளது. இணையப் பொருளாதாரத்தில் வருங்காலத்தில் தனது கரிசனையை வெளிப்படுத்தும் வகையில், கவர்ச்சிகரமான அறிவிப்புக்களை வெளியிட்டுள்ளது.

மறுபுறத்தில், கோவிட் பெருந்தொற்றினால், ஆஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்பவர்களின் எண்ணிக்கை இரண்டாவது நிதியாண்டிலும் வீழ்ச்சி கண்டிருக்கிறது. கடந்த வருடம் 77 ஆயிரம் பேரினால் குறைவடைந்த புலம்பெயரிகளின் எண்ணிக்கை, இந்த வருடம் ஜூன் மாதம் 97 ஆயிரமாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தொடர்ச்சியான வீழ்ச்சி ஆஸ்திரேலியாவுக்கு வரவேண்டிய திறமையாளர்களில் - வளமான ஆளணிகளில் - பெரும் பின்னடைவை ஏற்படுத்தப்போகிறது. அது தேசிய பொருளாதாரத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தப்போகிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. இது தொடர்பான விரிவான கட்டுரையொன்று கடந்த மாத எதிரொலியில் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இது ஒருபுறமிருக்க, அகதிகளை வருடமொன்றுக்கு உள்வாங்கிக்கொள்ளும் எண்ணிக்கையிலும் அரசு இம்முறை வரவு -செலவுத்திட்டத்தில் எந்த மாற்றத்தையும் அறிவிக்கவில்லை. வருடமொன்றுக்கு 13 ஆயிரத்து 750 அகதிகளை ஏற்றுக்கொள்வது என்ற எண்ணிக்கையை தொடர்ந்தும் பேணப்போவதாக அறிவித்திருக்கிறது. இந்த எண்ணிக்கையானது கடந்த வருடம் ஐயாயிரத்தினால் குறைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இந்த வரவு செலவுத்திட்டத்தில் ஒரு இனிப்பான செய்தியாக -

சுற்றுலாத்துறை (tourism) மற்றும் விருந்தோம்பல் மேலாண்மை (hospitality) துறையில் பணிபுரியும் வெளிநாட்டு மாணவர்களுக்குரிய - வாரத்துக்கு இருபது மணிநேரம் என்ற - வேலை நேரக்கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் தற்போது கல்விகற்கும் சுமார் மூன்று லட்சம் வெளிநாட்டு மாணவர்களுக்கும், வாரத்துக்கு இருபது மணிநேரம் மாத்திரமே வேலை செய்யமுடியும். இது அவர்களது மாணவர் விஸா கட்டுப்பாடுகளில் பிரதானமான ஒன்றாகும்.


ஆனால், கோவிட் சிக்கலால் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கும், மிகவும் பாதிக்கப்பட்ட துறைகளான சுற்றுலாத் துறை - விருந்தோம்பல் மேலாண்மை துறைகளில் ஏற்பட்டுள்ள தொழிலாளர் பற்றாக்குறையை நீக்குவதற்கும் அரசாங்கம், மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

மேற்படி சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் மேலாண்மைதுறைகளில் தற்போது பணிபுரிந்துகொண்டிருக்கும் தற்காலிக விஸாவிலுள்ளவர்கள், தங்களுடைய விஸா நிறைவடைவதற்கு 90 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பித்தால், குறிப்பிட்ட துறைகளில் அவர் தொடர்ந்து பணியாற்றுவதற்கு ஏதுவாக 12 மாதங்களுக்கு விஸாவை நீடிப்பதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் ஏற்கனவே தற்காலிக விஸாவில் ஏனைய துறைகளில் பணிபுரிகின்றவர்களும், குறிப்பிட்ட சுற்றுலாத்துறை, விருந்தோம்பல் மேலாண்மைத் துறைகளில் பணிபுரியும் நோக்குடன், தங்களது விஸா காலம் முடிவடைவதற்கு 90 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பித்தால், 12 மாத கால விஸா நீடிப்பு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆக மொத்தம், மிக நுட்பமாக கையாளப்பட்டிருக்கம் மொறிஸன் அரசாங்கத்தில் இந்த வரவு - செலவுத்திட்டமானது நாட்டு மக்களின் பல உடனடி சிக்கல்களுக்கு அமருந்தாக அமைந்திருக்கிறது. அதுபோல, தொலைநோக்குடையதாகவும் காணப்படுகிறது என்று பொருளியல் நோக்கர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.


24 வருட கால
நகை
அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
• குறைந்த வட்டி வீதம்
• கடன் தொகை படிப்படியாக
மீள் செலுத்தும் வசதி
• ஏழு நாட்களும் சேவையில்
EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
Bala 0420 877 303
#Shop L01 102c, Dandenong Plaza
Shopping Centre, 49-55 McCrae Street,
Dandenong VIC 3175

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:03 அதிர்வு: 47 மே 2021 தொ.பே:1800 960162

# சுடர்களில் வழிந்த உறைகுருதி

ஒரு இனத்தின் மீது நடத்திய பேரழிவின் சாட்சியங்களையும் இலகுவாக அழித்தொழித்துவிட்டு, வரலாற்றைத் தின்று ஏப்பமிட்டுவிடலாம் என்ற சிறிலங்கா அரசின் திட்டம், 12 ஆவது வருடமாக பொய்த்திருக்கிறது. அறத்தின் முன்பாக – நீதியை விரும்பும் உலக அரங்கின் முன்பாக – தொடர்ச்சியாக 12 வருடங்கள் தோல்வி கண்டிருக்கிறது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தாயகத்திலும் – உலகெங்கிலும் – பல லட்சக்கணக்கான தமிழக மக்களின் மனங்களிலும் உணர்வுபூர்வமாக அனுட்டிக்கப்பட்டிருக்கிறது.

இரும்புக்குழாய்களினால் கந்தகப் பெருங்கனல் களை ஏவி, இரத்த வெள்ளத்தில் உயிர்களை சீவி யெறிந்த கொலைப்படலத்தை, சிறிலங்காவின் வரைபடத்திலிருந்து இலகுவாக அழித்துவிடலாம் என்ற சிங்கள ஆட்சியாளர்களின் தசாப்தகால தொடர் கனவில் தமிழ் மக்கள் மீண்டுமொரு தடவை தீயள்ளி வீசி யிருக்கிறார்கள்.

இந்தப்பெருந்தொற்றுக்காலத்திலும்கூட தனது ஈனக்கரங்களினால் நினைவுத்தூபிகளை தகர்த்து, தான் செய்த பொல்லாத தவறின் தடயங்களை அழிக்க முனைந்த இராணுவ ஆட்சியாளர்கள், உலகெங்கும் திரண்டெழுந்து நினைவுகூர்ந்த முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளின் முன்னால் நிர்வாணப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இன்னும் எத்தனை காலம் சென்றாலும், நீதிக்கு முன் நிறுத்தப்படாத கொலையாளிகளை உலகின் முன் மீண்டும் மீண்டும் முரசறைந்து சொல்லிக்கொண்டேயிருப்போம் என்ற செய்தியை உலகெங்கிலும் உள்ள தமிழ் உறவுகள் சிங்கத்தின் முகத்தில் ஓங்கி அறைத்து சொல்லி யிருக்கிறார்கள்.

முள்ளிவாய்க்காலில் தூபிகளை இடித்தழிப்பதன் மூலமும், வணக்கம் செலுத்தச் சென்ற சிவாஜிலிங்கத்தை துரத்துவதன் மூலமும், நினைவேந்துபவர்களை கைது செய்து பயமுறுத்துவதன் மூலமும் சிங்கள ஆட்சியாளர்கள் வேண்டுமானால் தங்களுக்குள் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இன்னமும் கறைபோகாத குருதிக் கரங்களோடு தமிழ் வீதிகளில் வலம் வருகின்ற இராணுவத்தின் ஒரு சில பட்டாலியன்களுக்கு திருப்தியாக ஒரு வேலையைக் கொடுத்திருக்கலாம்.

ஆனால், இது இணையம் விரிந்துவிட்ட காலம். இமைகளின் அடியில் தொழில்நுட்ப சாதனங்களை சுமந்து தெரியும் காலம்.

முள்ளிவாய்க்கால் நினைவுகள் மதிப்பளித்தது மாத்திரமல்லாமல், அந்த நினைவேந்தலை நிராகரித்து, நினைவுத்தூபிகளை இடித்தழித்த சிங்கள படையினரின் அட்டூழியத்தை சிங்கள தேசத்தின் அடுத்த தலைமுறையினரே கண்டித்திருக்கிறார்கள். சிங்கள மக்கள் நம்பிக்கையோடு ஆட்சிக்கு கொண்டுவந்த அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை குறித்து அவர்கள் வெட்கி தலைகுனிந்திருக்கிறார்கள்.

நாட்டின் சுபீட்சத்துக்காக அதை செய்தோம், இதைச் செய்தோம், புலியை அழித்தோம், பயங்கரவாதத்தை ஒழித்தோம் என்று கோஷமிட்ட அரசு –

சிறுபான்மையினங்கள் அனைத்தையும் தனது இனவாத கொடுங்கரங்களால் குதறிக்கொண்டிருப்பது குறித்து சிங்கள தேசம் கொஞ்சம் கொஞ்சமாக விழிப்படையத்தொடங்கியுள்ளது.

இரத்தக்கறைகொண்ட கரங்களோடு நீதியை மறுத்துக்கொண்டிருக்கும் ஆட்சியாளர்களின் இருப்பு தொடரும்வரைக்கும் தங்களது நாட்டுக்கு மீட்சியில்லை என்ற உண்மையை சிங்கள தேசம் கொஞ்சமாக கொஞ்சமாக உணரத்தலைப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பெனப்படுவது முள்ளிவாய்க்காலில் வைத்து மாத்திரம் நினைவுகொள்ளப்படக்கூடியது அல்ல. முள்ளிவாய்க்காலை மையமாக வைத்து நோக்கப்பட வேண்டியது.

தாயகத்தில் மாத்திரமல்லாமல், இன்று உலகெங்கிலும் பரந்து வாழும் அத்தனை ஈழத்தமிழர்களும் சிறிலங்கா இனவாத அரசின் காயங்களை சுமந்திருக்கிறார்கள். உலகெங்கிலும் வாழும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களில் பலர் சிறிலங்கா அரசு வீசிய எறிகணைகளின் சிதறல்களை சுமக்கிறார்கள். இன்னும் எத்தனை காலங்களுக்கும் காலாவதியாகாத கொடிய நினைவுகளை சுமக்கிறார்கள்.

யுகம் யுகமாக அத்தனை தலைமுறைகளுக்கும் கடத்தப்படப்போகும் வலியோடு வாழுகின்ற இனமாக – உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற மாபெரும் படுகொலை படலத்தின் ஒற்றைச்சாட்சியாக – தமிழினம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளும் அவற்றில் திரளும் அடுத்த தலைமுறையினரும் மீண்டும் மீண்டும் இந்த செய்தியைத்தான் கனமாக உலகின் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழின அழிப்பு நினைவேந்தல் நிகழ்வுகள் ஒவ்வொரு வருடமும் மேலும் மேலும் எழுச்சியோடு நடைபெறுவது மாத்திரமல்லாமல் –

தமிழினத்தின் மீதான அழிவின் சாட்சிகள் மேலும் மேலும் பல வெளிநாடுகளின் காதுகளுக்கு சென்றடை கின்றன. பல வெளிநாட்டு அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் கரிசனையோடு குரல் கொடுக்க ஆரம்பித் திருக்கிறார்கள்.

கனடாவில் பிரதமர் முதற்கொண்டு பல அரசியல் வாதிகள் தனி அறிக்கைகள் மூலம் தமிழின அழிப்பினை நினைவுகூறியுள்ளது மாத்திரமல்லாமல் –

கனடியாக அரச அவை ஒன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இனப்படுகொலை தொடர்பான நினைவூட்டல் வாரம் ஒன்றையே பாடசாலைகளில் வருடா வருடம் அனுடிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது புலம்பெயர்ந்த மக்கள் அடைந்துள்ள அதி உச்ச வெற்றி. தன் இனத்துக்கு ஏற்பட்ட பெருந்துயரை சர்வதேச சமூகத்தில் – தான் வாழும் களத்தில் – காத்திரமாக முன்வைத்திருக்கும் பயங்கர வெற்றி.

ஆனால், சிவாஜிலங்கம் முள்ளிவாய்க்காலில் நினைவேந்தச் சென்றபோது, சுடரெற்றும் சட்டியை தூக்கியெறிந்த சிங்கள துப்பாக்கிதாரிக்கு இது தெரிய நியாயமில்லை.

தமிழீழ காவல்துறையின் சீருடை வண்ணத்தில் சீருடை அணிவித்தார் என்ற குற்றச்சாட்டில் யாழ். மாநகர மேயரை கைது செய்து சென்ற குற்றப்புலனாய்பு பிரிவினருக்கு இது தெரிய வாய்ப்பில்லை.

திலீபனையே நினைவு கூருவதற்கு அனுமதியை மறுத்துக்கொண்டு நீதிமன்ற கட்டளைகளோடு ஓடித் திரியும் பொலீஸாருக்கு இது புரிவதற்கு நியாயமில்லை.

இவர்கள் எல்லோரும் சிங்கள ஆட்சியாளர்களின் இறக்கைகளுக்கு கீழே நின்றுகொண்டு சேவகம் செய்கிறார்கள். அவ்வாறு சேவகம் செய்வதையே தேச விசுவாசம் என்று நம்புகிறார்கள்.

புலம்பெயர்ந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் தொடர் நினைவேந்தல்களும் – தமிழின அழிப்பு தொடர்பாக வெளிநாடுகள் அடைகின்ற விழிப்புணர்வுகளும் நாளை எழுப்பப்போகும் கேள்விகளுக்கு இவர்களிடம் பதி லிருக்காது. இவர்களின் அடுத்த தலைமுறையிடமும் விடையிருக்காது.

போரின் வெற்றியை விதைகளாக நாட்டி, கட்டி யெழுப்புவதற்கு ஆசைப்படுகின்ற சிறிலங்கா எனப்படும் தேசம், நாளை உலக அரங்கிலும் – ஏன் உள்ளூரிலும் – வெறுப்புக்கும் நகைப்புக்கும் பாத்திரமான ஒரு தேசமாக வெட்கித்தலை குனியும். இரத்தம் தோய்ந்த துணிகளால் மறைத்து வைத்திருந்த நீதியை இனியும் எவ்வாறு ஒழிப்பது என்று வழி தெரியாமல் பன்னாட்டு அரங்கில் உறைந்து கிடக்கும்.

அந்த நிலையை எதிர்கொள்ளப்போகும் சிறிலங்காவின் அடுத்த தலைமுறை, தன் பழைய ஆட்சிக்காரர்களையும் – அட்டூழியங்களை அரங்கேற்றியவர்களையும் ஒருங்கே சபிக்கும். அன்றைய அரசியலை எதிர்கொள்ள முடியாமல் தவிக்கும் தனது தேசத்தின் கர்மவினை கண்டு இரத்தக் கண்ணீர் வடிக்கும்.

அன்று சகலதும் கை மீறிப்போய்விட்டிருக்கும்.

இதற்குத்தான் இன்றைய சிறிலங்கா அரசு மேலும் மேலும் வழிகோலிக்கொண்டிருக்கிறது. இன்னும் தெளிவாகச்சொன்னால் குழி தோண்டிக்கொண் டிருக்கிறது. ■



# Sai Shree Foods

Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI





# வைரஸ் நடந்து வந்த பாதையும்

# கோத்தா அரசு பார்த்த வேலையும்

● சூழியன்

கொரோனா வைரஸின் மூன்றாவது அலை இலங்கையில் தாண்டவமாடிவருகின்றது. பச்சிளம் குழந்தைகள் முதல் கரு சுமக்கும் தாய்மார்வரை நாளாந்தம் செத்து மடியும் அவல நிலை ஏற்பட்டுள்ளதுடன் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் கிடுகிடுவென உயர்வதால் உலக சுகாதார நிறுவனமும் இலங்கை தொடர்பில் அபாய சங்கு ஊதியுள்ளது.

எனவே, தற்போதைய நெருக்கடி நிலை-யை இலங்கை உரிய வகையில் முகாமை செய்து, வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்த தவறும்பட்சத்தில், ஜூன் மாதம் முதல் நாளாந்த மரண எண்ணிக்கை இருநூறைத் தொடக்கூடும் என வோஷிங்டன் பல்கலைக்கழகத்தின், சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீட்டு நிறுவனம் (IHME) எச்சரித்துள்ளது.

இவ்வாறு ஆபத்து உச்சம் தொட்டுள்ள நிலையில்தான், இலங்கை அரசு கொரோனா ஒழிப்பு சமரில் தீவிரம் காட்ட ஆரம்பித்துள்ளதுடன், அவ்வைரஸை கட்டுப்படுத்தக்கூடிய - வைரஸ் பிடிக்குள் இருந்து மீளக்கூடிய - பிரமாஸ்திரமான தடுப்பூசியை இறக்குமதி செய்வதிலும் முழுவீச்சுடன் செயற்பட்டுவருகின்றது.

கொரோனா வைரஸின் முதலாவது அலையைக் கட்டுப்படுத்தியபோதே, அரசு உரிய பொறிமுறைகளை வகுத்து செயற்பட்டிருந்தால் - திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தால் - இன்று இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதே துறைசார் நிபுணர்களின் கருத்தாகும்.

தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்படும் என முழங்கிய கோட்டா அரசு, மக்களின் சுகாதார பாதுகாப்பு குறித்து உரிய அவதானம் செலுத்தவில்லை. அவ்வாறு செலுத்தியிருந்தால் 3ஆவது அலை உருவாகியிருக்காது என சுட்டிக் காட்டும் எதிரணிகள் அதற்கான காரணங்களையும் பட்டியலிட்டுள்ளன.

அதுமட்டுமல்ல, கொரோனாகூட அரசியல் மயப்படுத்தப்பட்டது. சுகாதார துறையினர் செய்யவேண்டியவற்றை இராணுவம் செய்யும் நிலை உருவானது. பொருளாதார மீட்பு என்ற போர்வையில் ஆபத்தை தாமாகவே அரசு நாட்டுக்குள் அழைத்தது. அரசின் இவ்வாறான அணுகுமுறைகளும் ஆபத்துக்கு வழி சமைத்தது எனவும் எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டுகின்றன.

## கொரோனா முதலாவது அலையும் வெற்றிக்கொண்டாட்டமும்

ஒட்டு மொத்த உலகையுமே மிரளவைத்த கொரோனா வைரஸ், 2019 டிசம்பரில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்கு அது வேகமாக பரவிய நிலையில் வைரஸின் ஆபத்து தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச 2020 ஜனவரி மாதத்திலேயே நாடாளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தார். அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தியிருந்தார். அதற்கு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுந் தரப்பில் கூறப்பட்டாலும் 'நடவடிக்கை' என்பது ஆமை வேகமாகவே அமைந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் - 2020 ஜனவரி 27 ஆம் திகதி - இலங்கையில் முதலாவது கொரோனா வைரஸ் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டார். இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த சீன பெண்ணொருவரே வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கை எனப்படும் தேசம் தீவு என்பதால் பயணிகள் விமானம் மற்றும் கப்பல்களுக்கு அப்போதே தடைவிதித்து உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் ஒருவரோடு கொரோனாவுக்கு சமாதி கட்டியிருக்கலாம். சாதனைப்பட்டியலிலும் இணைந்திருக்கலாம். ஆனால், உரிய நகர்வுகள் முன்னெடுக்கப்படவில்லை. தொற்றுக்குள்ளான சீனப்பெண் குண-மடைய, அவருக்கு முத்தம் கொடுத்து வழியனுப்பி வைத்தார் சுகாதார அமைச்சர். அதனை வைத்து பெரும் பிரச்சாரமும் முன்னெடுக்கப்பட்டது.

அதன்பின்னர் - மார்ச் 11 ஆம் திகதி தான் - இலங்கையர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இத்தாலியிலிருந்து இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டியாக செயற்பட்டவருக்கு இவ்வாறு வைரஸ் தொற்றியிருந்தது.

அதன்பின்னர், நாட்டில் மேலும் சிலருக்கு வைரஸ் தொற்று பரவியது. தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கம் நிறைவடையும்வரை காத்திருந்து, அரசும் அவசர நடவடிக்கையில் இறக்கியது. விமான நிலையங்கள் மூடப்பட்டன. பாடசாலைகள் மூடப்பட்டன. பிறகு முழு நாடும் மார்ச் முதல் முடக்கப்பட்டது. மே நடுப்பகுதியிலேயே ஊரடங்கு நடைமுறை தளர்த்தப்பட்டு ஓரளவுக்கு இயல்பு நிலை திரும்பியது.

2020 மே முதலாம் திகதியளவில் இலங்கையில் 665 பேருக்கே வைரஸ் தொற்றியிருந்தது. இவர்களில் 157 பேர் குணமடைந்திருந்தனர். 7 மரணங்கள் மட்டுமே பதிவாகியிருந்தது. அதுவும் நாட்பட்ட நோயினால் பாதிக்கப்பட்டவர்களே மரணித்திருந்தனர். முதலாவது அலையில்இருந்துகடற்படை கொத்தணி, பொலிஸ் கொத்தணி என உப கொத்தணிகள் உருவாகியிருந்தாலும் அவை கட்டுப்படுத்தப்பட்டன.

2020 ஆகஸ்ட் 5 பொதுத்தேர்தல் நடைபெற்றது. மொட்டு கட்சி வெற்றி பெற்றது. தேர்தல் களத்தில் "கொரோ-னாவை கட்டுப்படுத்தினோம்" "நிவாரணம் வழங்கினோம்" என்றெல்லாம் பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது. இது விடயத்தில் "எல்லா புகழும் கோட்டாபய ராஜபக்சவுக்கே சென்றடைய வேண்டும்" - என உரிமை கோரப்பட்டது. "போரை முடிவுக்கு கொண்டுவந்த ஜனாதிபதி, கொரோனாவுக்கு எதிரான போரிலும் வெற்றிபெற்றுவிட்டார்" - என அதிரடி அறிவிப்புகளும் வெளியாகின.

## 2ஆவது அலையும் அரசியல் விளையாட்டும்

கொரோனாவுடன் வாழப்பழக வேண்டும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றெல்லாம் அறிவித்தல்கள் விடுக்கப்பட்டிருந்தாலும் தேர்தலுக்கு பின்னர் கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் பணிகள் தேக்கமடைந்தன என்றே குறிப்பிட வேண்டும்.

2020 ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல், மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை கொத்தணியும் அதன்பின்னர் பேலியகொட மீன் சந்தை கொத்தணியும் தாண்டவமாடின. இது இரண்டாம் அலையாகக் கருதப்பட்டது.

2 ஆம் அலையின் ஆரம்பப்புள்ளி எதுவென இன்னும் உரிய வகையில் கண்டறியப்படவில்லை. எனினும், உக்ரைன் நாட்டிலிருந்து வந்த சுற்றுலாப் பயணிகள்மூலம் பரவியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

முதலாவது அலையில் 13 பேர் பலியா-கினர். எனினும், 2020 டிசம்பர் 31 ஆம் திகதியாகும்போது கொரோனா பலி எண்ணிக்கை 199 ஆக அதிகரித்திருந்தது. அதாவது 186 பேரின் உயிரை 2ஆம் அலை பறித்தெடுத்தது. வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் 43 ஆயிரமாக அதிகரித்தது.

முதலாவது அலையைக்கட்டுப்படுத்திய அனுபவம் உள்ளது. எனவே, இரண்டாம் அலையையும் கட்டுப்படுத்துவோம் என அரசு சூளுரைத்திருந்தாலும் கொரோனா பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. முழு நாடும் முடக்கப்படவில்லை. எனினும், சில பகுதிகள் முடக்கப்பட்டிருந்தன.

மறுபுறத்தில், முதலாவது அலையை வெற்றிகரமாக முடிப்பதற்கு பங்களிப்பு வழங்கிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜயசிங்கவுக்கு பதவி உயர்வு என்ற போர்வையில் இடமாற்றம் வழங்கப்பட்டது. அத்துடன், எம்.ஆர்.ஐ. எனப்படுகின்ற மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் பிரதானி ஜயருவான் பண்டாரவும் இடம்மாற்றப்பட்டார். எதிர்ப்புகள் வலுத்ததால் சுகாதார அமைச்சின் பேச்சாளர் பதவி வழங்கப்பட்டது. பின்னர் அதுவும் நீக்கப்பட்டது. மேலும் சில சுகாதார அதிகாரிகளும் இவ்வாறு மாற்றப்பட்டனர்.

(09ஆம் பக்கம் பார்க்க)



எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI



# வைரஸ் நடந்து வந்த பாதையும் கோத்தா அரசு பார்த்த வேலையும்



(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான காரணம் தெளிவாக அறிவிக்கப்படவில்லை. ஆனாலும் எல்லா புகழும் தமக்கு வரவேண்டும் என்பதற்காகவே ராஜபக்சக்கள் இவர்களை மாற்றினர் என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின. 2 ஆவது அலையைக் கட்டுப்படுத்த அரச தரப்பில் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பதே பொதுக்கருத்தாகும்.

உலகமே தடுப்பூசி தொடர்பில் கவனம் செலுத்தி, அவற்றைக்கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கையில் இறங்கிய நிலையில், இலங்கையின் சுகாதார அமைச்சர் ஆற்றிலே பானையை போட்டு ஆன்மீக வழிபாடு நடத்தினார். தேசிய வைத்தியத்தை பாதுகாக்கின்றோம் என்ற போர்வையில் ஆசாமிகளால் தயாரிக்கப்பட்ட பாணிகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. சபாநாயகர் கூட குறித்த பாணியை பருகி பரப்புரைக்கு ஒத்துழைப்பு வழங்கினார். ஆனால், பாணி பெயில் என்பதை தற்போது நிபுணர்கள் ஆய்வுமூலம் உறுதிப்படுத்தியுள்ளனர்.

2 ஆவது அலை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதால் அது தொடர்பில் அரசுக்கு படிப்பினையும், அனுபவமும் இருந்திருக்க வேண்டும். நியமிக்கப்பட்ட குழுக்களும் நாளாந்த நிலைமைகளை ஆராய்ந்திருக்க வேண்டும். அதேபோல வைத்தியர்கள் மற்றும் சுகாதார பரிசோதகர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பில் அரசு கவனம் செலுத்தியிருக்க வேண்டும். தடுப்பூசி ஏற்றும் பணியை விரைந்து முன்னெடுக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

இவற்றை உரிய வகையில் செய்யாது - செயற்படுத்தாது - பொருளாதாரத்தை மீட்கின்றோம் என்ற போர்வையில் விமான நிலையங்கள் திறக்கப்பட்டன. சுற்றுலாப்பயணிகள் வரவழைக்கப்பட்டனர். உதயங்க வீரதுங்க உக்ரைன் நாட்டு பிரஜைகளை அழைத்துவந்தார். அதன் விளைவாக, இங்கிலாந்து வைரஸ் இங்கு வந்தது என்ற குற்றச்சாட்டும் உள்ளது. கண்காணிப்பு பொறிமுறை தேக்க நிலையை அடைந்தது. இவற்றால்தான் மூன்றாம் அலையும் - பேரலையாக நாட்டை தாக்கிக்கொண்டிருக்கின்றது.

இந்தியாவில் ஒக்ஸிஜன் இல்லாமல் மக்கள் செத்து மடியும் காட்சிகள், கங்கையில் மிதக்கும் சடலங்கள், எரிக்கப்படும் கொவிட் சடலங்கள் போன்றவற்றை பார்த்த பிறகுதான், இலங்கை வாழ் மக்களில் பெரும்பாலானவர்களுக்கு மரண பீதி ஏற்பட்டுள்ளது. அதற்கு முன்னர், வைரஸ் தொடர்பில் அவர்கள் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. பலர் சுகாதார நடைமுறைகளைக்கூட பின்பற்றவில்லை. நிறுவனங்களில் சுகாதார வழிகாட்டல்கள் கடைபிடிக்கப்படவில்லை. மூன்றாவது அலைக்கு மக்களின் நடத்தையும் பிரதான காரணம் எனக்கூறலாம். தமக்கான பொறுப்பையும், பொதுநலனையும் மறந்து செயற்பட்டதால் இன்று உயிருக்கு உத்தரவாதமற்ற நிலை உருவாகியுள்ளது.

## 3ஆவது அலையும் வைரஸ்களின் படையெடுப்பும்

2020 டிசம்பர் நடுப்பகுதி முதல் பொது சுகாதார பரிசோதகர்களும், வைத்தியர்களும் மூன்றாம் அலை தொடர்பில் எச்சரிக்கை விடுக்க ஆரம்பித்தனர். நத்தார் பண்டிகை மற்றும் புத்தாண்டு கொண்டாட்டங்களை தவிர்க்குமாறும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் கோரிக்கை விடுத்தனர். எனினும், காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மக்களும் அலட்சிய போக்கில் செயற்பட்டனர். இதனால் 2020 டிசம்பர் மாதத்தில் மட்டும் 18 ஆயிரத்து 838 பேருக்கும், 2021 ஜனவரியில் மட்டும் 20 ஆயிரத்து 996 பேருக்கும் வைரஸ் தொற்று உறுதியானது.

அதன்பின்னர், வைரஸ் தொற்று வீதம் சற்று குறைய ஆரம்பித்தாலும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் நிலைமை மோசமானது. புத்தாண்டு கொத்தணியே உருவாகிவிட்டது. புத்தாண்டு குறித்தும் முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. எனினும், கடும் கட்டுப்பாடுகளை அரசு விதிக்கவில்லை.

தற்போது நாளாந்தம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். மரண எண்ணிக்கையும் நாளாந்தம் 20ஐ தாண்டுமளவுக்கு நிலைமை மோசமாகவுள்ளது. இதற்கிடையில், ஆறு நாடுகளில் பரவும் கொரோனா வைரஸ் இனங்கள் இலங்கையில் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன.

பிரித்தானியாவின் கென்ட் பகுதியில் அடையாளம் காணப்பட்ட B.1.1.7, டென்மார்க், ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகளில் அடையாளம் காணப்பட்ட B.1.428, இலங்கையில் அடையாளம் காணப்பட்ட B.1.411 நைஜீரியாவில் அடையாளம் காணப்பட்ட B.1.525, இந்தியாவில் அடையாளம் காணப்பட்ட B.1.617, தென் ஆபிரிக்காவில் அடையாளம் காணப்பட்ட B.1.351 ஆகியவையே அவையாகும். பிரேசில் நாட்டு வைரஸ் மட்டும்தான் இன்னும் வரவில்லை.

இந்தியாவில் இருந்து வந்து தனிமைப்படுத்தலில் இருந்த ஒருவருக்கே B.1.617 வைரஸ் தொற்றியிருப்பது பரிசோதனைமூலம் கண்டறியப்பட்டது. இதனால் சமூகத்தொற்று தடுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம், இந்தியாவின் நிலைமை இங்கு உருவாகாது எனக் கூறமுடியாது. ஏனெனில், இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக இலங்கை வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆழ் கடலுக்கு தொழிலுக்கு செல்லும் மீனவர்கள் இருக்கின்றனர். இவர்கள் ஊடாகக்கூட பரவலாம்.

அதேவேளை, 3 ஆவது அலைமூலம் வைரஸ் தொற்று வேகமாக பரவிவரும் நிலையில், 10 ஆயிரம் கட்டில்களை அமைக்கும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. தாமதித்தாவது விழித்துக்கொண்டு முன்னாயத்தப்பணியில் அரசு ஈடுபட்டுள்ளதை பாராட்ட வேண்டும். ஆனால், கட்டில்களின் எண்ணிக்கையை மட்டும் அதிகரித்தால் போதுமானதாக இருக்குமா? இலங்கையில் கொரோனா தொற்றாளர்களுக்கென சுமார் 140 ஐ.சி.யூ கட்டில்களே ஒதுக்கப்பட்டுள்ளன. ஐ.சி.யூக்களில் பணியாற்ற பயிற்சிபெற்ற ஊழியர்களே அவசியம். வைத்தியர்கள் அவசியம். தாதியர்கள் அவசியம். எனவே, சுகாதார துறையில் ஆளணி பலத்தை அதிகரிப்பது தொடர்பிலும் அரசு கவனம் செலுத்த வேண்டும். வைத்தியர் ஒருவரை, தாதி ஒருவரை திடீரென உருவாக்கிவிட முடியாது. தற்போதுள்ள சூழ்நிலையில் வெளிநாட்டில் இருந்தும் அழைத்துவரமுடியாது. எனவே, மாற்று ஏற்பாடுகள் குறித்தும் சிந்திப்பது சிறந்ததாக அமையும்.

## தடுப்பூசிகளும் தடுமாற்றங்களும்

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மீள்வதற்கான மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. தற்போதைய சூழ்நிலையில் தடுப்பூசி மட்டுமே பாதுகாப்பு வழிமுறையாக இருக்கின்றது. இதனால் பல நாடுகள் முன்கூட்டியே ஒப்பந்தங்களை செய்து, தேவைக்கு அதிகமாகவும் தடுப்பூசிகளை பெற்றுள்ளன. தெற்காசிய நாடுகளுக்கு இந்தியா ஆரம்பத்தில் ஒரு தொகை அஸ்ட்ரா செனிக்கா தடுப்பூசிகளை வழங்கியது. அந்தவகையில் இலங்கைக்கும் 5 லட்சம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றன. அதன் பின்னர் இந்தியாவின் சீரம் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு மேலும் ஒரு தொகையை இலங்கை கொள்வனவு செய்தது.

அஸ்ட்ரா செனிக்கா தடுப்பூசியானது இரண்டு கட்டங்களாக ஏற்ற வேண்டும். முதலாவது டோஸ் செலுத்தப்பட்டு, 14 வாரங்களுக்குள் 2 ஆவது டோஸ் வழங்கப்பட வேண்டும். ஜனவரி 29 ஆம் திகதி முதல் ஏப்ரல் 15 ஆம் திகதிவரை முன்கள பணியாளர்கள் உட்பட 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு அஸ்ட்ரா செனெக்கா தடுப்பூசியின் முதல் டோஸ் ஏற்றப்பட்டது.

முதல் சுற்றில் தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களுக்கு இரண்டாவது சுற்றிலும் ஏற்றுவதற்கு தேவையான அளவு தடுப்பூசிகளை வைத்துகொள்ளுமாறு பல தரப்பினரும் அரசுக்கு ஆலோசனை வழங்கினர். எனினும், 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்தது. ஆனால், 2 லட்சத்து 65 ஆயிரத்து 465 பேருக்கு இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 6 லட்சத்து 59 ஆயிரத்து 777 பேருக்கு இரண்டாவது டோஸை வழங்க தடுப்பூசிகள் இல்லை. இந்தியாவில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் தடுப்பூசி ஏற்றுமதி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, அஸ்ட்ரா செனிக்கா தடுப்பூசிகளை மேலதிகமாக கொள்வனவு செய்து வைத்துள்ள நாடுகளிடம் உதவி கோருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்விவகாரத்தை ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரதுங்க கையாண்டு வருகின்றார்.

சிலவேளை தடுப்பூசி கிடைக்காவிட்டால் என்ன நடக்கும் என்ற வினாவும் எழுகின்றது. முதல் சுற்றில் செலுத்தப்பட்ட தடுப்பூசி வகையே இரண்டாம் சுற்றிலும் செலுத்தப்பட வேண்டும். ஒருவருக்கு இரு வகையான தடுப்பூசிகளை செலுத்த முடியுமா என்பது இன்னும் விஞ்ஞானப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை என்பதால் 6 லட்சத்து 59 ஆயிரத்து 777 பேர் குழப்பத்தில் உள்ளனர்.

இதற்கிடையில் சீன தயாரிப்பான சினோ பாரம் தடுப்பூசிக்கு உலக சுகாதார நிறுவனம் அனுமதி வழங்குவதற்கு முன்னரே, அவை சீனாவினால் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. முதற்கட்டமாக ஏப்ரல் 2 ஆம் திகதி இலங்கையிலுள்ள சீனர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது. 2 ஆயிரத்து 435 பேர் தடுப்பூசி பெற்றுக்கொண்டனர். சீனாவின் தடுப்பூசிக்கு உலக சுகாதார நிறுவனம் அனுமதி வழங்கிய நிலையில், இலங்கையிலும் அது பயன்பாட்டுக்கு வந்தது. மே 16 ஆம் திகதிவரை 3 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

அடுத்ததாக ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசியும் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு வழங்கப்பட்டுள்ளது. தடுப்பூசி பெற தகுதியான அனைவருக்கும் தடுப்பூசி வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. பைசர் தடுப்பூசி மட்டுமே இன்னும் இலங்கையில் பாவனையில் இல்லை. ஜூன் மாதமளவில் 6 லட்சம் பைசர் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட செயலணி, தொழில்நுட்பக்குழுக்கள் தோல்வி கண்டுள்ளன என்பதையே தற்போதைய நாட்டு நிலைவரம் உணர்த்தி நிற்கின்றது. அத்துடன், ஆபத்து என தெரிந்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால் பலர் உயிரிழந்துள்ளனர். எனவே, இதனை அடிப்படையாக வைத்து ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணைக்கூட கொண்டுவரலாம் என எதிரணி தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரேசிலில் - கொரோனா காலத்தில் செயற்படத்தவறிய - அந்நாட்டு ஜனாதிபதிக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.




# ஜேர்மன் நாடுகடத்தலின் பின்னணி என்ன?

# அதிர்ச்சியில் இறந்த தமிழ் இளைஞன்!



மனித உரிமைகளைக் கடைப் பிடிக்க மறுக்கும் நாடுகளுக்கு எதிராக பொங்கியெழுந்து, தங்களை மனித உரிமைக் காவலர்களாக காட்டிக் கொள்ளும் அமெரிக்கா - ஐரோப்பா - ஆஸ்திரேலிய நாடுகள், தங்களது நாடுகளில் தஞ்சமடைந்துள்ள அகதிக் கோரிக்கையாளர்கள் மீது காட்டும் மனி தாபிமானம் என்ன சீத்துவத்திலிருக்கிறது என்பதை சொல்லத்தேவையில்லை.

கொரோனாவின் கோரப்பிடிக்குள் மூச்சுத்திணறிக்கொண்டிருக்கும் ஐரோப்பா கண்டத்தில் உள்ள ஜேர்மனிய தேசம், அகதிக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட சுமார் நூற்றுக்கும் அதிகமானவர்களை பிடித்து, அவர்களின் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் அண்மையில் இறங்கியிருந்தது. இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்களில் 26 பேர் ஈழத்தமிழர்கள். கணவன் - மனைவி, தாய் - பிள்ளை என குடும்பங்கள் பிரித்து நாடு கடத்தப்பட்டவர்களும் இவர்களில் அடக்கம்.

அகதிகளைப் பிடித்து அனுப் பும் செயற்பாட்டில் ஜேர்மன் இறங்கி விட்ட நிலையில், அங்குள்ள அகதிக் கோரிக்கையளர்கள் பலரின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்த ஆள்பிடியில் சிக்கிவிடக்கூடாது என, தனது அறையை விட்டு வெளியே வராது உள்ளேயே முடங்கியிருந்த ஈழ அகதிக் கோரிக்கையாளர் ஒருவர் சடலமாக மீட்டப்பட்ட சம்பவமும் ஜேர்மனியில் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் கண்ணதிட்டியை சேர்ந்த பிரபாகரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

கொத்தாக அகதிகளை நாடுகடத்தும் இந்தச் செயற்பாட்டை உடனடியாக நிறுத்தக்கோரி, ஜேர்மனியில் தமிழர்கள் போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். ஆனால், அகதிகளுக்கான போராட்டங்கள் வெற்றி கண்ட வரலாறுகள் மிக அரிதா-கவே காணப்படுகின்றன.

இவ்வாறு இலங்கைக்கு நாடு கடத்தப் பட்டவர்கள் கொரோனா தனிமைப்படுத் தலின் பின்னர் விடுவிக்கப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டபோதிலும், அவர்களுக்கான விசாரணைகளை சிறிலங்கா புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்துள்ளனர் என்று தெரியவருகிறது.

### ஜேர்மன் அகதிகள் விசாவும் நிராகரிப்பும்

ஆஸ்திரேலியாவுக்குள் அகதிகளாக வருவோர் கடல் மார்க்கத்தினைப் பிர-தானமாக கொண்டுள்ளனர். ஆனால், அகதிகளை அங்கிகரிக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வோர், பல ஆபத்தான வழிகளை நாடுகின்றனர். கருங்கடல் படகு பயணங்கள் மற்றும் நீண்ட தூர பயணங்கள் போன்ற வழிகளை ஆட்கடத்துவோரை நம்பிப்போகிறார்கள். நீண்டதூர பயணங்களின்போது வனங்களையும் சதுப்பு நிலங்கள் மற்றும் அகழிகளையும் உறைபனி மலைகளையும் கடந்து செல்லவேண்டிய நிலையிலுள்ளனர்.

இவ்வாறான நடை பயணங்களில்போது சகதிக்குள் சிக்குண்டது மட்டுமின்றி, நடக்க முடியாதவர்களை இடைவெளி-யே விட்டுச்சென்ற சம்பவங்களில் பலர் உயிரிழந்துள்ளனர். இவர்களிர் பல ஈழத்தமிழர்களும் அடங்குவர்.

இப்பேற்பட்ட பயணங்களின் ஊடாகச் சென்று, தங்களை அகதி என நிரூபிக்கத்தவறி, மீண்டும் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுதல் என்பது எவ்வளவு கொடுமை என்பது இதனை அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும்.

### அகதியாக அங்கீகரித்தல்- நாடுகடத்தும் முறை

ஜேர்மன் நாட்டுக்குள் விமான நிலையத்தின் ஊடாக உள்நுழைபவர்கள், விமான நிலைய குடிவரவு திணைக்களத்தின் ஊடாகவும், எல்லை நாடுகள் ஊடாக ஜேர்மனிக்குள் பிரவேசிப்பவர்கள் அந்தந்த பிராந்தியங்களில் அமைந்துள்ள அகதிக்கோரிக்கைக்கான பிரதான அலுவலகங்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பித்த பின்னர், அவர்களை அகதிகளுக்கான முகாமுக்கு அனுப்புவர். அப்போதிருந்து, அந்த அலுவலகம் ஒவ்வொரு ஆறுமாத காலத்துக்கான விசாவை வழங்கும். இந்த முகாம்கள் அடைக்கப்பட்டவை இல்லை. அகதிகள் வெளியே செல்ல முடியும்.

ஆனால், அவர்கள் அந்த முகாம் களிலேயே 18 மாதங்கள் தங்கியிருக்க வேண்டும். இது கட்டாயம். முகாம்களில் இருக்கும்போதே அகதிக்கான முதற்கட்ட விசாரணைகள் நடைபெறும். இந்த முதற்கட்ட விசாரணை முடிவுற்ற பின்னர் - அதற்கான பதில் வருவதற்கு முன்னர் - குறித்த அகதிகளை ஒவ்வொரு நகரப்பகுதியில் அமைந்துள்ள முகாம்களுக்கு மாற்றம் செய்யப்படுவர். இதன்போது அவர்கள் வேலை செய்ய முடியும், படிக்க முடியும். ஆனால், அவர்கள் அந்த முகாம்களிலேயே காலம் தள்ளவேண்டும்.

முதற்கட்ட விசாரணையில், அகதியாக அங்கிகரிக்கப்படத் தவறும் பட்சத்தில், அவர் நீதிமன்றம் செல்ல வேண்டும். அந்த நீதிமன்ற நடவடிக்கைக்கான தனக்குரிய சட்டத்தரணிகளை குறித்த அகதிகளே ஒழுங்கு செய்ய வேண்டும். நீதிமன்றமும் அகதியென ஏற்றுக்கொள்ளத்தவறும் பட்சத்தில் உயர் நீதிமன்றம் செல்லவேண்டும்.

உயர் நீதிமன்றில்தான் ஒரு சிக்கல் உள்ளது, எவ்வளவு ஆதாரங்களை திரட்டிக்கொடுத்தாலும் உயர் நீதிமன்றம் நேரடியாக அகதிகளை அழைத்து விளக் கம் கோராது. குறிப்பிட்ட அகதி, ஏற்க னவே வழங்கிய ஆதாரங்கள் மற்றும் அகதிக்கோரிக்கை, பிரதான அலுவலகத் தால் வழங்கப்பட்ட மற்றும் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகள் ஆகியவற்றை ஒப்பிட்டுதான் உயர் நீதிமன்றம் முடி வெடுக்கும்.



(11ஆம் பக்கம் பார்க்க)

# ஜேர்மன் நாடுகடத்தலின் பின்னணி என்ன?

## அதிர்ச்சியில் இறந்த தமிழ் இளைஞன்!





(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர் நீதிமன்றமும் பாதகமாக மாறும் பட்சத்தில் ஆறுமாதகாலத்துக்கு ஒரு-தடவை வழங்கப்படும் விசா மூன்று மாதங்களாக குறைக்கபட்டு, சிவப்பு நிற கோடிடப்பட்ட விசாவாக வழங்கப்படும்.

ஆனால், இத்துடன் அகதிக்கோரிக்கைக் கான வாய்ப்பு முடிந்துவிடுவதில்லை. எல்லாவித நடைமுறையிலும் தோற்றுப் போன அகதிகோரிக்கையாளர், மீண்டும் - அதாவது இரண்டாவது தடைவையாகவும் - அகதிக்கோரிக்கை விண்ணப்பத்தை விண்ணப்பிக்க முடியும். இருந்தாலும், குறித்த அகதியிடம் சிவப்பு கோடிட்ட விசாவே நடைமுறையில் இருக்கும்.

சிவப்பு நிற கோடிடப்பட்ட விசாவைக் கையளிக்கும்போதே, குறித்த விசாவை வைத்திருப்போரை நாடுகடத்தும் செயற்பாட்டினைக் கையாளும் திணைக்களத்துக்கும் தகவல் பறந்துவிடும். குறிப்பிட்ட நபர் எப்போது வேண்டுமானலும் நாடுகடத்தப்படலாம் என்பதை அந்த "சிவப்பு கோடு" அடையாளப்படுத்திக்கொண்டே இருக்கும்.

இதுதான் நாடு கடத்தபடுவதில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறை. இந்த நடைமுறையின் ஊடாக வந்தவர்களில் 26 பேரே அண்மையில் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டுள்ளார்கள்.

மேற்குறித்த விசாரணைகளில், ஏதாவது ஒரு படிமுறையின்போது அகதியாக அங்கிகரிக்கப்பட்டாலும் அவருக்கு "பிரயாண ஆவணம்" (வுசயஎநட னுழஉரஅநவெ) ஒன்றில் மூன்று வருடங்களுக்கான விசா வழங்கப்பட்டு சுதந்திர மனிதாக கருதப்படுவார்.

இப்போது - கொரோனா கட்டுப்பாடுகளின் மத்தியில் - அவசர அவசரமாக - அகதிகளை நாடுகடத்தவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது?

அகதிகளை அங்கிகரிக்கும் தேசங்களெல்லாம் வாக்கு அரசியலுக்காக அகதி எதிர்ப்பு அரசியலைக் கையில் வைத்துக்கொண்டு "அகதிகளாலேயே எமது தேசம் முடங்கபோகிறது" - என்று மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து, வாக்குச் சேர்க்கும் முறை ஆஸ்திரேலியாவில் மட்டுமல்ல, அமெரிக்கா முதல் ஐரோப்பா வரை நடைமுறையில் உள்ளது.

ஜேர்மன் நாடு எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி தனது அடுத்த தேர்தலை சந்திக்கவுள்ளது. ஜேர்மனியின் கிறிஸ்தவ கட்சி தொடர்ந்து பல தேர்தல்களில் வென்று அதிபர் மெல்கலின் தலைமையில் ஆண்டு வருகின்றது. இந்நிலையில், 2015 ஆம் ஆண்டு அதிபர் மெல்கலின் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி சிரிய அகதி-களை நாட்டுக்குள் அனுமதித்திருந்தார் என்று, இதன் விளைவாக எழுந்த எதிர்ப்புகளை, அகதிகளுக்கு எதிரான கொள்கையாக உருமாற்றி, "ஜேர்மனிக்கான மாற்றீட்டுக் கட்சி" (Alternative for German) 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தன்னை எதிர்கட்சியாக நிலை நிறுத்திக்கொண்டது.

தீவிர வலதுசாரிக்கட்சியான "ஜேர்மனிக் கான மாற்றீட்டுக் கட்சி" எதிர்வரும் செப்ரம்பர் மாதம் நடைபெற உள்ள தேர்தல் வாக்குறுதிகளில், அகதிகள் மீதான வன்மத்தைக் கொட்டியுள்ளது. அந்த வகையில், "அகதிகள் குடும்பத்தை சேர்க்க தடைவிதிப்போம்" - என்ற அஸ்திரத்தை தூக்கியுள்ளது.

இந்தப்பின்னணியில்தான், ஜேர்மனியின் தற்போதைய ஆளும் மெல்கலின் அரசு நூற்றுக்கும் அதிகமான அகதிகளை பிடித்து நாடு கடத்தத் தொடங்கியுள்ளது.

இவ்வாறு நாடு கடத்தப்பட்டவர்களில், குடும்பத்தை பிரித்து அனுப்பபட்டவரின் மனைவி ஒருவர், தனது கணவருக்கு ஏற்பட்ட அனுபவம் குறித்துக் கூறும்போது -

"எனது கணவருக்கு விசா புதுப்பிப்பதற்கு வருமாறு அழைப்பு வந்தது. சகல ஆவணங்களையும் கொண்டுவருமாறு அதிகாரிகள் கூறியிருந்தார்கள். கூப்பிட்டபடி எனது கணவர் காலையிலேயே சென்றார். அந்த அலுவலகத்துக்குள் காத்திருந்த பொலிஸார் திருடர்களை பிடிப்பதைப் போல, எனது கணவரைக் கைதுசெய்தனர். அதன்பின்னர், எனக்குத் தெரியப்படுத்தவே இல்லை. கணவருக்கு தொலைபேசி எடுத்தேன். தொடர்புகொள்ள முடியவில்லை. மீண்டும் மீண்டும் தொடர்பு கொண்டு இறுதியில், நாடு கடத்தப்படுவதற்கு குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னர்தான் இணைப்பை ஏற்படுத்த முடிந்தது.

"அவரை இறுதியாக எனது மகனுடன் பேச அனுமதிக்குமாறு கோரினேன். அதி-காரிகள் அனுமதிக்க வில்லை.

"தற்போது நாட்டில் உள்ளார்.

"நானும் எனது பிள்ளைகளும் இங்கு. எமது குடும்பம் இரண்டாக பிளவுபட்டிருக்கின்றது. இனி எப்போது சேர முடியும் என்ற கேள்வி மட்டுமே என்னிடம் எஞ்சியுள்ளது"

இவ்வாறு தெரிவித்த நாடுகடத்தபட்ட குடும்பஸ்தரின் மனைவி, இந்தக் கைதை நாம் ஏற்கனவே இலங்கையில் அனுபவித்திருக்கின்றோம் என்றும் கூறி-னார்.

ஜேர்மனிலிருந்து நாடுகடத்த இருந்த நிலையில், அவரது அறையிலேயே உயிரிழந்த பிரபாகரன் என்ற அகதியின் - இலங்கையில் இருக்கும் - தாயாருடனும் ஜேர்மனில் உள்ள அவரது நண்பர்களிடமும் பேசியபோது கிடைக்கப்பெற்ற தகவல்கள் வருமாறு -

"தம்பி! அவன் நாடு கடத்தப்போறாங்கள் என்று பயந்திட்டான் போல" - என்று தளுதளுத்த குரலில் பேச ஆரம்பித்தார் பிரபாகரனின் தாயார்.

"பிரபா 2018 ஆம் ஆண்டு நாட்டை விட்டு சென்றார். கடன்பட்டு அனுப்பிவச்சன். இங்கிருந்து தப்பிக்க வேண்டும் என்றுதான் அவனை அங்கு அனுப்பி வச்சன். அவனுக்கு இப்படி ஒரு முடிவு வரும் என நினைக்கவில்லை" - என வயோதிபமும் புத்திரனின் இழப்பும் குழைந்த குரலில் பிரபாவின் தாயார் விவரித்தார்.

"நான் ஒரு நோயாளி. எனக்கான மருத்துவ செலவு மட்டுமல்ல, வாழ்வாதர செலவுக்கும் அவன்தான் பணம் அனுப்புவான். அண்மைக்காலமாக அவன-ின் விசாவில் ஏதோ பிரச்சினை. வேலைக்கும் போறதில்லை. அது தொடர்பாகதான் அடிக்கடி கதைப்பான். ஆனால், அவனின் உயிரையே பறிக்குமளவுக்கு பிரச்சினை இருக்கும் எண்டு எங்களுக்கு தெரியாது" - என கூறியபடியே கதறி அழுதார்.

அதற்குப்பிறகு அவரால் பேசமுடியவில்லை. இலங்கையிலிருந்துகொண்டு தன்மகன் எப்படி இறந்திருப்பான் என்பதுகூட தெரியாது கதறியழும் தாயரின் குரலுக்கு யாரிடமும் பதில் இல்லை.

பிரபாவின் கடைசி நாட்கள் தொடர்பில் ஜேர்மனில் அவருடன் வசித்த நண்பர்களிடம் தொடர்பு கொண்டு வினவினோம்.

"நாங்கள் அனைவரும் 2018 ஆம் ஆண்டிலிருந்தே நண்பர்கள். நாடு கடத்தப்பட்டவர்களைப் போன்ற விசாவே பிரபாவிடமும் இருந்தது. அதனால் எங்களுடன் பேசும் போதெல்லாம் எப்போது நாடுகடத்துவார்களோ தெரியாது, தப்பித்து வேறுநாட்டுக்கு செல்லும் வழியை தேடவேண்டும் என்பதே பிரபாவின் பேச்சாக இருக்கும்.

"இங்கிருந்து சிலர் நாடு கடத்தப்பட்ட தகவலை அறிந்த நாள்முதல் - பல இடங்களில் - மறைந்தே இருந்தார். கடந்த எட்டாம் திகதி வியாக்கிழமை இறுதியாக கதைத்தார். ஆனால், எங்கிருக்கிறார் என்று சொல்வதில்லை. நாமும் கேட்பதில்லை. ஏனெனில், அது அவருக்கு பாதகமாக அமைந்துவிடும் என்பதால். அதன்பின்னர் - அடுத்தநாட்கள் வெள்ளி, சனி போன்ற நாட்களிலும் - வழக்கம்போல தொடர்பெடுத்தோம். அவர் எடுக்கவில்லை. சக நண்பர்களிடமும் விசாரித்தோம். அவர்களும் தொடர்பு கொள்ளவில்லை என்றே சொன்னார்கள்.

"ஆக, அவரை நாடுகடத்திவிட்டார்கள் என்றே நினைத்தோம். 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொலிஸாருக்கு தொடர்பு கொண்டு, அவரைக் காணவில்லை என அறிவித்தோம். பின்னர், அவர் இருந்த அறைக்கு சென்ற பொலிஸார், அவரை சடலமாக கண்டதாக எமக்கு அறிவித்தார்கள். அவர் எட்டாம் திகதி வியாழக்கிழமை இரவே உயிரிழந்திருக்கவேண்டும். ஏனெனில், சடலம் மீட்கப்படும்போது அவ்வாறே காணப்பட்டது.

"நாம் பார்த்து - பேசி - நித்தமும் பழகிய பிரபா உருகுலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டது எமக்கு மரண வேதனையாக இருந்தது. ஊயிரைக் காக்க வந்தவனின் உயிர், இன்று பிறந்துவிட்டது. நண்பர்கள் இருந்தும் அவன் அநாதையாகவே இறந்துபோனான். அவனின் சடலத்தை மீட்க எமக்கு நான்கு நாட்கள் தேவைப்பட்டன. அவனுடைய சடலத்தை நாட்டுக்கு அனுப்ப முயற்சிக்கிறோம்" - என்ற வலியோடு உரையாற்றி முடித்துகொண்டனர் அவரது நண்பர்கள்.

# சிலிண்டர்களில் மனிதனை சிறைவைத்த கிருமி



## காற்றின்றி திணறி சாகும் உலகின் இதயம்!

கவல்கணன்

தண்ணீரைப் புட்டிகளில் அடைத்து மற்றவர்களுடன் பகிரும் பழக்கம் 1621ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்துவிட்டது என்று சரித்திரம் சொல்கிறது. புனித நீர் என்கிற பெயரில், சில குறிப்பிட்ட நீரூற்றுகளிலிருந்து 17ஆம் மற்றும் 18 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியர்கள் மற்றும் அமெரிக்க குடியேற்றவாசிகள் புட்டிகளில் எடுத்துச் சென்றார்கள்.

இப்படியான இயற்கை நீரூற்றுகள் செல்வந்தர்கள் மற்றும் உயர் வர்க்கத்தினரிடையே ஒரு நாகரீகமாக மாறியது. அமெரிக்காவில் இப்படி தண்ணீரை புட்டிகளில் அடைத்து விற்பது ஒரு தொழிலாக 1844ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இவை எல்லாவற்றிற்கும் முன்னரே, அகத்திய முனிவர் சிவ பூசை செய்வதற்காக கமண்டலத்தில் கொண்டு வந்த கங்கை நீரை காகம் போல் உருமாறிய பிள்ளையார் சாய்த்துவிட கமண்டலத்திலிருந்து வழிந்து ஓடிய நீரே காவிரி ஆறாக ஓடியது என்று புராணக் கதையை சிலர் ஆதாரம் காட்டலாம்.

நான் இன்னமும் தலைப்பிற்கே வரவில்லை. அதற்கு முன் சில அடிப்படை விடயங்கள் சொல்லப்பட வேண்டும்.

அமெரிக்காவில் Poland Spring ஃப்ரான்ஸ்சில் Evian மற்றும் Perrier போன்ற நிறுவனங்கள் கனிம நீரூற்றுகளிலிருந்து வரும் நீரை புட்டிகளில் அடைத்து, 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து விற்றார்கள். DuPont என்ற இரசாயன பொருட்கள் தயாரிக்கும் நிறுவனத்தில் பணியாற்றிய Nathaniel Wyeth என்ற பொறியாளர் 1973ஆம் ஆண்டு polyethylene terephthalate (PET)) என்ற நெகிழி (plastic) உருவாக்கி, அதற்கான காப்புரிமையைப் பெற்றார். மருந்தகங்களில் விற்கப்பட்டுவந்த புட்டியில் அடைக்கப்பட்ட தண்ணீரை, மளிகைக் கடைகளுக்கு எடுத்து வந்தது PET நெகிழியிலிருந்து தயாரிக்கப்பட்ட புட்டிகள்.

ஒரு மனிதன் உயிர்வாழ, சுத்தமான நீர் மிக அவசியம். அதனால்தான், அடிப்படை மனித உரிமைகளில் அதுவும் ஒன்று என்று ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக் கொண்டிருக்கிறது. புட்டிகளில் நீரை அடைத்து விற்றால், அடுத்தது என்ன? மனிதனுக்கு மிக அவசியமான இன்னொரு பொருளான காற்றிற்கும் விலை சொல்லப் போகிறார்கள் என்று ஐம்பது வருடங்களுக்கு முன்னரே குரல்கள் எழுந்தன. ஆனால், அதனை நடைமுறைப்படுத்த முடியுமா என்று நினைத்து, யாரும் அதனைப் பெரிதாக எடுக்கவில்லை.

சுத்தமான காற்று என்று பொதுவாக நாம் சொல்லும் போது, மாசுக்கள் அற்ற காற்று என்பது ஒன்று. இருந்தாலும், அதில் ஐந்தில் ஒரு பகுதி ஒக்சிஜன் - என்ற பிராணவாயு - இடம்பெற்றிருக்க வேண்டுமென்பது எல்லோரதும் விருப்பம். இந்த ஒக்சிஜன் எமக்குத் தாவரங்களிலிருந்து கிடைக்கிறது என்பது தெரியும். ஆனால், மரங்களில் இருந்துதான் இந்த ஒக்சிஜன் கிடைக்கிறது என்று பலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உலகில் உற்பத்தியாகும் 70 சதவீதமான ஒக்சிஜன் நீர் நிலைகளின் கரைசல்களில் இருந்து தோன்றுகிறது. இதன் தோற்றத்திற்கு, கடல் சார் மிதவை வாழிகள் (Planktonn) மிக முக்கிய பங்காற்றுகின்றன. அதற்காக மரங்கள் தேவையில்லை என்று நாம் சொல்ல வரவில்லை. மரங்களை விட இந்த நுண்ணுயிர்கள்தான் ஒக்சிஜன் உருவாகுவதற்கு மிக முக்கிய பங்காற்றுகின்றன.



நாம் சுவாசிக்கும் காற்றின் மிகப்பெரும் பகுதி நைட்ரஜன் (அல்லது நைதரசன்) வாயுவாகும். ஐதரசன் மற்றும் ஹீலியம் வாயுக்களை அடுத்து பிரபஞ்சத்தில் மூன்றாவது மிக அதிகளவில் காணப்படும் வேதியியல் தனிமமான ஒக்சிஜன் எங்கும் பரந்திருக்கிறது. வாயுவாக அல்லாமல் உலோகங்களுடனும் மற்றைய பதார்த்தங்களுடனும் இரண்டறக்கலந்து, ஒக்சைட் வடிவில் காணப்படுகிறது. எமது உடலில் அதிகப்படியாக இருக்கும் உலோகம் (பலரும் நினைப்பது போல் இரும்பு அல்ல) கல்சியம், ஒக்சிஜனுடன் கலந்துதான் காணப்படுகிறது.

இதை முதலில் தனிமைப்படுத்தி அறிந்து கொண்டவர் என்ற பெருமை, 1775 ஆம் ஆண்டு இதைப்பற்றி “An Account of Further Discoveries in Air” என்ற கட்டுரை எழுதிய Joseph Priestley அவர்களுக்குச் சென்றாலும், 1772ஆம் ஆண்டே சுவீடன் நாட்டு விஞ்ஞானி Carl Wilhelm Scheele சில பரிசோதனைகள் மூலம் காட்டியிருந்தார். இதுகுறித்து அவர் எழுதிய கட்டுரை 1777ஆம் ஆண்டுதான் வெளியாகியது.

இந்த இரண்டு விஞ்ஞானிகளைக் காட்டிலும், Antoine Lavoisier என்ற ஃப்ரெஞ்ச் விஞ்ஞானிதான் ஒக்சிஜன் என்பதன் இரசாயனப் பாவனையை முதன் முதலில் இலகுவாக விளக்கியவர். நாம் பயன்படுத்தும் மெட்ரிக் அளவு முறைக்கு வழி சமைத்தவர்களில் இவரது முக்கிய பங்கும் இருக்கிறது. இதற்கெல்லாம் அவருக்குக் கிடைத்த பரிசு, அவரது 50ஆவது வயதில் - 1794ஆம் ஆண்டு மே 8ஆம் தேதி - ஃப்ரெஞ்ச் புரட்சிவாதிகளால் அவரது தலை துண்டிக்கப்பட்டது.

நாம் உயிர்வாழ்வதற்குத் தேவையான அத்தியாவசியமான விடயங்களில் ஒக்சிஜன் மிக முக்கியமானது என்பதைக் கண்டறிந்த ஆரம்ப விஞ்ஞானிகளில் ஒருவரான Antoine Lavoisier இறப்பதற்கு ஒக்சிஜன் காரணம் என்று சொல்ல முடியாது என்றாலும், கடந்த ஒன்றரை வருடங்களாக மனித குலத்தில் பலர் உயிரிழக்க ஒக்சிஜன் ஒரு காரணமாக இருக்கிறது.

ஒரு நுண்ணுயிர், இல்லை அதற்கு உயிரே இல்லை, இருந்தாலும் மனிதன் எவ்வளவு பலவீனமானவன் என்பதை மனிதகுலத்திற்கு எடுத்துச் சொல்லி வருகிறது.

மனிதன் உயிர் வாழ, ஒக்சிஜன் ஒரு அத்தியாவசிய பொருளாகும். சமீபத்திய வாரங்களில், COVID-19 தொற்று மிக வேகமாக இந்தியாவில் பரவியதைத் தொடர்ந்து, அதன் முக்கியத்துவம் இன்னும் பன்மடங்கு பெரிதாக வெளிப்படுத்தப்படுகிறது. இந்தியாவின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு சிறப்பு புகையிரதங்கள் ஒக்சிஜனை எடுத்துச் செல்கின்றன. 2019ஆம் ஆண்டு மட்டும் 5 மில்லியன் கன மீட்டர் (cubic meter) தொகை ஒக்சிஜனை ஏற்றுமதி செய்த இந்தியா, தனது மக்களின் சுவாசத் தேவைக்கு ஒக்சிஜன் கிடைக்காமல் திண்டாடுகிறது.

இந்தியா மட்டுமல்ல, COVID-19 தொற்றுநோய் காரணமாக, பிரேசில், பெரு, நைஜீரியா, ஜோர்டன், இத்தாலி போன்ற வளர்ந்துவரும் நாடுகள், அமெரிக்காவின் நியூயார்க் நகரம் மற்றும் கலிஃபோர்னியா மாநிலங்களிலுள்ள மருத்துவமனைகளும் ஒக்சிஜன் தட்டுப்பாட்டை எதிர் கொண்டுள்ளன.

> மரங்களில் இருந்துதான் இந்த ஒக்சிஜன் கிடைக்கிறது என்று பலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பற்றாக்குறைகள் எதிர்பாராத ஒன்றல்ல. ஆனால், மருத்துவமனைகளில் எவ்வளவு ஒக்சிஜன் தேவைப்படும், அந்தத் தேவையை எப்படி நாம் கையாளலாம் என்பதை சரியாகக் கணிக்க முடியாமல்தான் பல மருத்துவமனைகள் திண்டாடுகின்றன.

நாம் சுவாசிக்கும் காற்றில் இருக்கும் ஒக்சிஜனை விட, மருத்துவத்திற்குப் பயன்படும் ஒக்சிஜனின் செறிவு மிக அதிகமாகும்.

எமது வளி மண்டலம் பெரும்பாலும் நைதரசன் வாயுவால் நிரம்பியுள்ளது. சுமார் 21 சதவிகிதம் மட்டுமே ஒக்சிஜன் வாயுவாகும். மருத்துவ ஒக்சிஜன் குறைந்தபட்சம் 82 சதவிகிதம் தூய ஒக்சிஜன் ஆகும். மருத்துவ ஒக்சிஜன் - பொதுவாக - ஒரு வேதியியல் செயல்முறை மூலம் பெறப்படுகிறது. அதன் நவீன பயன்பாடு, முதலாம் உலகப் போருடன் ஆரம்பமாகியது என்பது வரலாறு.

Mustard Gas என்று பொதுவாக அழைக்கப்படும் Sulfur mustard என்ற வேதிப் பொருளை, ஜேர்மனியர்கள் ஐரோப்பாவில் பயன்படுத்தினார்கள். ஒக்சிஜன் செறிந்த காற்றை நேரடியாக சுவாசிக்க வைப்பதன் மூலம், இந்த வேதிப் பொருளை சுவாசித்த படைவீரர்களின் உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது.

அதேபோல, COVID-19 தொற்று ஏற்பட்டவர்கள் சுவாசிக்க சிரமப்படும்போது மருத்துவ ஒக்சிஜன் அவர்களது உயிர்காப்பு நண்பனாகிறது. COVID-19 தொற்று ஏற்பட்டு Pneumonia போன்ற நுரையீரல் அழற்சி அல்லது அது போன்ற சுவாச நோய்களுக்கு ஒக்சிஜன் சிகிச்சை மிகவும் முக்கியமானது. ஒருவரின் இரத்தத்தில் உள்ள ஒக்சிஜனின் அளவு குறைந்துவிட்டால், உடலின் உறுப்புகள் ஒவ்வொன்றாக செயலிழக்க ஆரம்பித்துவிடும். இதுவே COVID-19 தொற்று ஏற்பட்டவர் மரணிக்கவும் காரணமாகிறது.

ஒக்சிஜன் ஒருவருக்குத் தேவைப்பட்டபோது கிடைக்குமா, இல்லையா என்பது பல்வேறு விடயங்களில் தங்கியுள்ளது. இருப்பிடத்தைப் பொறுத்து ஒக்சிஜன் விநியோக அமைப்புகள் வித்தியாசப்படுகின்றன. மருத்துவ நிலையம் சிறியதா - பெரியதா, நகர்ப்புறத்தில் உள்ளதா அல்லது கிராமப்புற சூழலில் அமைந்துள்ளதா மற்றும் அதிக வருமானம் கொண்ட சமூகமா - இல்லையா என்பதைப் பொறுத்து இது மாறுபடுகிறது.

உலகெங்கிலும் உள்ள முக்கிய சுகாதார வசதிகள், பாரிய ஒக்சிஜன் தாங்கிகளை நம்பியுள்ளன. இந்த அமைப்பில், மருத்துவமனைகளிலுள்ள ஏராளமான தொட்டிகளில் ஒக்சிஜன் திரவ நிலையில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும். தேவைக்கேற்ப, ஒக்சிஜன் குழாய்கள் மூலம் மருத்துவமனையின் எந்தப் பகுதியிலும் பயன்படுத்த வசதி செய்யப்பட்டிருக்கும்.

இந்த அமைப்பை உருவாக்க அதிக செலவாகும் என்பதால் சிறிய மருத்துவ நிலையங்களில் இவற்றை நாம் பார்ப்பது அரிது. அத்துடன், ஒக்சிஜன் தொட்டிகளை நிரப்புவதற்கு சந்தையில் ஒப்பீட்டளவில் ஏகபோக உரிமையைக் கொண்ட எரிவாயு நிறுவனங்களுடன் உடன்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்ற காரணத்தால், வளர்ந்துவரும் நாடுகளில் இப்படியான வசதி மிகக் குறைவாகவே அமைக்கப்பட்டுள்ளன.

அதற்கு பதிலாக, கிராமப்புற அல்லது வருமானம் குறைந்தவர்கள் வாழுகின்ற சமூகங்களிலுள்ள மருத்துவமனைகளில் ஒக்சிஜன் பொதுவாக சிலிண்டர்களில் சேமித்து வைக்கப்படுகின்றன. இவற்றையும் எரிவாயு நிறுவனங்கள்தான் பொதுவாக நிரப்புகின்றன. இந்த சிலிண்டர்களில் ஒக்சிஜன் அதிக அழுத்தத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், இந்த சிலிண்டர்கள் கனமானவை என்ற காரணத்தால், மிகவும் ஆபத்தானவை. பல இடங்களில் சிலிண்டர்களால் விபத்துகள் ஏற்பட்டிருக்கின்றன. அது தவிர, ஒரு ஒக்சிஜன் சிலிண்டர் மூலம் ஒரு வயதுவந்த நோயாளிக்கு ஒன்று முதல் மூன்று நாட்கள் போதுமான ஒக்சிஜனை மட்டுமே வழங்க முடியும்.

இவற்றிற்கும் மேலாக, எமது காற்றிலிருக்கும் ஒக்சிஜனை செறிவூட்டுவதன் மூலமும் நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்க முடியும். Oxygen concentrator எனப்படும் ஒக்சிஜன் செறிவூட்டிகள் 1970ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டில் உள்ளன. இந்த இயந்திரங்களில் zeolite எனப்படும் படிகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. காற்றிலிருந்து நைதரசன் வாயுவை இந்தப் படிகங்கள் உறிஞ்சி, செறிவூட்டப்பட்ட ஒக்சிஜனை நாசி முனைகளுடன் இணைக்கப்பட்ட குழாய்கள் வழியாக நோயாளிக்கு வழங்குகின்றன. பொதுவாக இந்தக் கருவி மூலம் இரண்டு நோயாளிகளுக்கு ஒக்சிஜன் வழங்க முடியும். ஆனால் அவை இயங்குவதற்குத் தொடர்ச்சியான மின்சாரம் தேவைப்படுகிறது. இப்போது அவற்றின் சிறிய கருவிகள் தனி ஒருவர் வீட்டில் பயன்படுத்தக்கூடிய வகையில் மின் கலம் மூலமோ,சூரிய ஒளியினாலோ இயக்கப்பட வடிவமைக்கப்பட்டுள்ளன.

COVID-19 தொற்றுநோய் அதி வேகமாகப் பரவ பரவ, அதனைக் கட்டுப்படுத்த சில நாட்டு அரசுகள் கவனக்குறைவுடன் செயல்படுவதால் அல்லது மூட நம்பிக்கையுடன் கண்ணை மூடிக் கொண்டு பால் குடிக்கும் பூனைகள் போல இருப்பதால்,ட இந்த ஒக்சிஜன் கருவிகளைத் தாமே பெற்று வீட்டிலேயே மருத்துவம் பார்க்கலாம் என்று பலர் தயாராகிவிட்டார்கள்.

தண்ணீரைப் புட்டியில் அடைத்து விற்றார்கள்.... நாங்கள் வாங்கினோம். நல்ல காற்றை சுவாசிக்க ஒரு கருவியை விற்கிறார்கள், நாங்கள் இப்போது வாங்குகிறோம்..... அடுத்தது சூரிய ஒளிக்கும் அந்த நிலை தோன்றுமா?



# தலை நிமிர்கிறது தமிழகம்

● அ.முத்துக்கிருஷ்ணன்

தமிழக மக்கள் கடந்த ஏப்ரல் 6 ஆம் திகதி எழுதிய பரீட்சையின் முடிவுகள் மே 2 ஆம் திகதி வெளியானது. தமிழக மக்கள் அதில் ஒரு தீர்க்கமான முடிவை வழங்கியிருந்தார்கள். தமிழக மக்கள் திமுக கூட்டணிக்கு உறுதியான பெரும்பான்மையையும் பரிசளித்திருந்தார்கள்.

திமுக தலைமையிலான கூட்டணி மற்றும் அதிமுக தலைமையிலான கூட்டணி ஆகிய இரு முனைகள்தான் இந்த முறை களத்தில் முதன்மையாக மோதின. மு.கருணாநிதி, ஜெ.ஜெயலலிதா ஆகிய இருவரின் மறைவுக்குப் பின் நடக்கும் முதல் சட்டமன்றப் பொதுத்தேர்தல் என்பதால், தமிழர்கள் மத்தியில் இந்தத் தேர்தல், தொடக்கத்தில் இருந்தே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஸ்டாலின் எனும் திமுகவின் புதிய தலைமைக்கும் இபிஎஸ்-ஓபிஎஸ் என்கிற அதிமுகவின் இரட்டை தலைமைக்கும் இடையே யார் வெல்வார்கள் என்கிற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்தது.

பத்தாண்டு காலம் ஆட்சியில் இல்லாத திமுகவை ஸ்டாலின் ஒரு கட்சியாக வழி நடத்தியிருக்கிறார், எதிர்க்கட்சியாக களத்தில் வேலை செய்திருக்கிறார். இந்த தேர்தலில் ஒன்றியத்தில் ஆளும் பாஜக மற்றும் மாநிலத்தில் ஆளும் அதிமுக ஆகிய இரு கட்சிகளின் "கள்ளக் கூட்டணியை" எதிர்ப்பது அத்தனை சுலபமான காரியம் இல்லை என்பதை அரசியல் வட்டாரங்கள் அறிந்திருந்தது.

பத்தாண்டு காலம் அதிமுக ஆட்சியில் இருந்தது, இரண்டாம் ஆட்சிக் காலத்தில் ஜெயலலிதாவின் மரணமும் அந்த மரணம் நடந்த விதமும் அதன் பின்னர் அரங்கேறிய கூத்துகள் குளறுபடிகள் அனைத்தையுமே மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருந்தனர். அதன் பின்னர், சசிகலா சிறைக்குச் சென்றார், இபிஸ் - ஓபிஎஸ் தர்ம யுத்தங்கள், தலைவிரித்தாடிய ஊழல்கள், ஜெயலலிதா ஒருபோதும் தமிழகத்தில் நுழைய அனுமதிக்காத திட்டங்கள் எல்லாம் நிறைவேறின. இருப்பினும் இவைகள் எதைப்பற்றியும் ஆழமாக பத்திரிக்கைகள் எழுதவில்லை, ஊடகங்களிலும் ஒருவித மௌனம் நிலவியது. பல ஊடகங்கள் ஸ்டாலினை நோக்கியே கேள்விகள் எழுப்பின.




பாஜகவுக்கும் அதன் சித்தாந்தத்திற்கும் தமிழகத்தில் இடமில்லை என்பதை அந்த கட்சி அறியும் எனினும், அவர்கள் எத்தனை புற வாசல்கள் அமைக்க முடியுமோ அத்தனை புற வாசல்களில் வழியிலும் தமிழக அரசதிகாரத்திற்குள் நுழைய முற்பட்டார்கள். அதிமுகவை கைப்பற்றி, மறைமுகமாக ஒரு பொம்மலாட்ட ஆட்சியை நடத்தினார்கள், அதிமுக தலைவர்களை அடிமைபோல் நடத்தினார்கள், தமிழகத்தின் முதலமைச்சர்கள் துணை முதலமைச்சர்கள் வேறு ஒருவரிடம் குனிந்து நிற்பதும், கையைக் கட்டி நிற்பதும், விமான ஓடுதளத்தில் காத்திருப்பதும் தமிழகத்தின் மாண்பையே அவமதிப்பதாக இருந்தது.

பாஜகவின் தலைமை அதிமுகவை அவமானப் படுத்துவதையும் தமிழக உரிமைகளுக்கு எதிராக செயல்படுவதையும் அப்பட்டமாக - வெளிப்படையாக - செய்தது, இதனை அவர்கள் பெருமிதமாகவும் கருதினார்கள். ஆனால், அவர்களின் இந்த செயல்பாடுகள் என்பது, தங்களுக்கு தாங்களே தோண்டிக்கொண்ட ஒரு படுகுழி என்பதை தேர்தல்வரை அவர்கள் உணரவேயில்லை. ஆனால், தமிழகத்தின் "சுயமரியாதையை மீட்டெடுப்பதற்கான போர்" என்று இத்தேர்தல் பிரச்சாரத்தில் ஸ்டாலின் முன்வைத்தது மக்களிடம் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

சமூக ஊடகங்களின் கிண்டல், கேளிகளும் திமுகவை நோக்கியே இருந்தன. அதிமுக, பாஜக, பாமக, கமலஹாசன், சீமான் என அனைவரது தேர்தல் பிரச்சார பரப்புரைகளுமே ஏதோ திமுக பத்தாண்டுகளாக ஆட்சி செய்வதை போலவே ஒரு தோற்றத்தை ஏற்படுத்தின. இது மோடி அரசு அவர்களின் குளறுபடிகளுக்கு எல்லாம் நேருதான் காரணம் என்று சொல்வது போலவே இருந்தது.

தேர்தல் ஆணையம் பாரபட்சமான முறையிலெல்லாம் நடந்துகொள்ளவில்லை. மாறாக, பாஜக - அதிமுகவின் ஒரு பிரிவாகவே செயல்பட்டது. இருப்பினும், தமிழக உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்கிற குரலை இந்த தேர்தலின் மூலம் மக்கள் பலமாகவே சொல்லியிருக்கிறார்கள்

ஒரு மிகவும் இக்கட்டான தருணத்தில் தமிழகத்தின் முதலமைச்சராக ஸ்டாலின் பதவியேற்றிருக்கிறார். ஒன்றிய அரசு ஸ்டாலினை உறங்க விடாது என்பதில் சந்தேகமில்லை. மத்தியில் ஆட்சி செய்பவர்கள் பாஜக அல்லாத முதல்வர்களை மாநிலங்களை எப்படி நடத்துகிறார்கள் என்பதை கடந்த ஏழு ஆண்டுகளாக இந்தியாவே பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. பாஜக அல்லாத கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களின் முதல்வர்களை நிதிக்காக கையேந்தி நிற்கவைக்கிறார்கள், அவர்களுக்கு உரிய ஜி.எஸ்.டி ஈவைக்கூட தர மறுக்கிறார்கள். கூட்டாட்சி என்கிற ஒரு தத்துவத்தை குழிதோண்டி புதைத்து ஒரு மன்னர் போல் நடந்து கொள்கிறார் மோடி.

மோடி - அமித்ஷா மேலாண்மையில் பாஜக அடைந்த பெரிய தேர்தல் தோல்விகள் மே 2 ஆம் தேதி ஒன்றின் பின் ஒன்றாக வெளியாயின.

வங்கத்தில் மம்தாவின் கைகளிலும் கேரளத்தில் பினரயி விஜயனின் கைகளிலும் இந்தத் தேர்தலை சந்தித்த தருணத்தில் அரசு கட்டமைப்பு இருந்தது ஆனால், ஸ்டாலின் வெறும் கையுடன் இந்தத் தேர்தலை சந்தித்து வென்றிருக்கிறார். இந்த மூன்று மாநிலங்களுமே மோடி - அமித்ஷா, ஊடகங்கள், தேர்தல் ஆணையம், சி.பி,ஐ என்பது தொடங்கி ஒரு பலம் பொருந்திய கூட்டணியை வீழ்த்தியிருக்கிறது.

கேரளத்தில் பாஜகவை இடதுசாரிகளும் காங்கிரசும் உள் நுழைய பெரிய அளவில் அனுமதிக்கவேயில்லை. "2016 இல் பாஜக தொடங்கிய கணக்கை நாங்கள் 2021ல் முடித்து வைப்போம்" - என்று சொல்லியடித்துள்ளார் பினரயி விஜயன்.

மம்தா இந்த தேர்தலுடன் இல்லாமல் போய்விடுவார் என்று ஒரு மாய பிம்பத்தை ஆங்கில ஊடகங்கள் மூலம் இந்தியாவெங்கும் ஏற்படுத்தினார்கள், ஆனால், அவர் ஒரு சக்கர நாற்காலியில் உட்கார்ந்தபடி - ஹவாய் ஸ்லிப்பருடன் - மாநிலத்தை வலம் வந்து வெற்றியை எட்டிப்பிடித்தார். பிரதமர் ஒருவர் 11 முறை ஒரு மாநிலத்திற்கு சென்றும் இத்தனை நூறு கோடிகளை செலவிட்டும்கூட பாஜக வங்கத்தில் அடைந்த மிகப்பெரிய தோல்வி இது.

இந்தியாவில் பிரிவினை, மதவாதம், ரவுடியிசம், அதிகாரம் ஆகியவற்றை வைத்துக்கொண்டு இனியும் வெல்ல முடியாது என்பதை பாஜக தலைமைக்கு மூன்று மாநிலத் தேர்தல் முடிவுகள் பாடம் புகட்டியிருக்கின்றன. நரேந்திர மோடி என்ற ஆளுமையின் வழிபாடு இந்தி மாநிலங்கள், குஜராத் போன்றவற்றை தாண்டி இந்தியா முழுமையிலும் இருப்பதாக உருவாக்கப்பட்ட மாயையை இந்த தேர்தல் தகர்த்திருக்கிறது.

இந்த தேர்தலில் வெற்றி பெற்ற ஸ்டாலின் திமுக வென்றதாக அறிவிக்கவில்லை. மாறாக, "தமிழகம் வென்றிருக்கிறது" - என்றார். சமூக நீதியையும் எல்லா நிலைகளிலான வாய்ப்புகளையும் உரிமைகளையும் பகிர்ந்தளிப்பதன் வழியே தமிழகம் மீண்டும் வெல்ல காத்திருக்கிறது.

ஸ்டாலின் பதிவியேற்பு விழா கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக மிக எளிமையாக நடைபெற்றது. அவரது பதவியேற்பு விழாவில் யாரும் மேசைக்கு அடியில் தவழவில்லை, இடுப்பளவிற்கு குனிந்து நிற்கவில்லை, யாரும் யார் காலிலும் விழவில்லை என்பதே தமிழகம் தலைநிமிரத் தொடங்கிவிட்டது என்கிற ஒரு உணர்வைத் தந்தது.

பதவியேற்பு விழா முடிந்ததும் நேரடியாக பெரியார் திடல் சென்ற ஸ்டாலின், பெரியாருக்கு மரியாதை செலுத்தியது மிக முக்கிய குறிப்புணர்த்தலாகவே ஒரு திசையைக் காட்டியது.

அவர் நேரடியாக முதலமைச்சர் அலுவலகம் சென்று குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா பேரிடர் நிவாரணத்தில் முதல் தவணையாக இம்மாதமே 2,000 ரூபாய் வழங்க, தனியார் மருத்துவமனையில் கொரோனாவிற்கு இலவச சிகிச்சை (அரசே அந்த செலவை ஏற்கும்), ஆவின் பால் லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு, அனைத்து மகளிரும் கட்டணமில்லாமல் நகரப் பேருந்துகளில் பயணம் செல்லலாம், "உங்கள் தொகுதியில் முதல் அமைச்சர்" எனும் புதிய துறை உருவாக்கம் என முதல் நாளில் முதல் கையெழுத்திட்டது ஒரு நல்ல தொடக்கம்.

தமிழகம் இந்தியாவின் முதன்மை மாநிலமாக இன்னும் பல சாதனைகள் படைக்க வேண்டும் என்பதுவே நம் எதிர்பார்ப்பு, காத்திருப்போம்.

குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா பேரிடர் நிவாரணத்தில் முதல் தவணையாக இம்மாதமே 2,000 ரூபாய் வழங்க, தனியார் மருத்துவமனையில் கொரோனாவிற்கு இலவச சிகிச்சை (அரசே அந்த செலவை ஏற்கும்), ஆவின் பால் லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு, அனைத்து மகளிரும் கட்டணமில்லாமல் நகரப் பேருந்துகளில் பயணம் செல்லலாம், "உங்கள் தொகுதியில் முதல் அமைச்சர்" எனும் புதிய துறை உருவாக்கம் என முதல் நாளில் முதல் கையெழுத்திட்டது ஒரு நல்ல தொடக்கம்.

H.N. PAWN BROKER
எச்.என். அடகு கடை

- குறைந்த வட்டி வீதம்
- சேவைக்கட்டணம் இல்லை
- நம்பிக்கை மிகுந்த ஒரே இடம்
- சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

தங்கப்பவுணுக்கு அதிகூடிய முற்பணம் வழங்கப்படும்

வட்டி 3%

Hub Arcade, 28/15-23 Langhorne St, Dandenong VIC 3175
Tel/Fax : 03 8712 1406, Ruban : 0423 094 478



நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்த - 10 வருடகால அனுபவமுள்ள...

PERPETUA TRADE
Money Transfer Worldwide

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

COMMERCIAL BANK · BOC · PEOPLE'S BANK · SEYLAN BANK PLC · HNB · SampathBank · NSB National Savings Bank · Cash Xpress

Send Money to any Bank In Sri Lanka

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# கனடிய தமிழர்களின் சாதனைகள்!

# உயரப்பறக்கும் எங்கள் ஊர் கொடிகள்!

கனடாவிலிருந்து மூர்த்தி



இன்றைய தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் - தன்னை தேர்ந்தெடுத்த வாக்களிப்பு முடிந்து - தேர்தல் முடிவுகள் தெரிய வர முன்னர் செய்த ஒரு பெரும் விடயம், ரொறன்ரோவில் அமையவிருக்கும் தமிழ் இருக்கைக்கு கடந்த ஏப்ரல் மாதம் **26**ஆம் திகதி **10** லட்சம் இந்திய ரூபாய்களை அளித்தாகும்! அதாவது "தமிழக முதல்வர் ஸ்டாலின் தமிழக மக்கள் தன்னை முதல்வராகத் தேர்ந்தெடுக்க வாக்களித்தபின் செய்த முதலாவது தமிழ் நிலைப்பட்ட வேலை ரொறன்ரோ பல்கலைக்கழக தமிழ் இருக்கைக்கு நிதியுதவி அளித்ததுதான்" என்று கனடியத் தமிழர்களில் சிலர் பெருமை கொள்கிறோம். உண்மைதானே.

ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் அமையும் இந்த தமிழ் இருக்கை ஒரு மைல் கல். இதற்கான நிதி உதவி தொடர்பாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டிருந்த அறிக்கையில், "கனடா நாட்டில் உள்ள ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை உருவாக வேண்டுமென்ற ஆர்வத்தோடு, கனடா வாழ் தமிழர்களும், உலகெங்கிலும் வாழும் தமிழர்களும் முயற்சி செய்து வருவதாகவும், அதற்குத் திமுகவின் சார்பில் நிதியுதவி தந்திட வேண்டுமென்றும் கனடியத் தமிழர் பேரவை நிறைவேற்று இயக்குநர் டன்ரன் துரைராஜா கோரிக்கை விடுத்திருந்தார். அதன்படி, எத்திக்கிலும் தமிழ் வளர்ச்சிக்கும்,



தமிழ் இருக்கை

TAMIL CHAIR

தமிழ் மொழிச் சிறப்புக்கும் என்றென்றும் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டுவரும் திமுகவின் சார்பில், கனடா ரொறொன்ரோ பல்கலைக்கழகத்தில் அமையவிருக்கும் தமிழ் இருக்கைக்கு ரூ.10 லட்சம் (பத்து லட்சம் ரூபாய்) நிதியுதவி வழங்கப்படுகிறது. செம்மொழி தமிழின் சிறப்பு எங்கெங்கும் பரவட்டும் - இளைஞர்களின் தாய்மொழித் தாகத்தைத் தீர்க்கட்டும்!" - என்று குறிப்பிடப்பட்டிருந்ததைப் பலரும் பார்த்திருப்போம்.

ஆக, தமிழக முதல்வரால் குறிப்பிடப்பட்டிருக்கும் கனடியத் தமிழர் பேரவை நிறைவேற்று இயக்குநர் டன்ரன் துரைராஜாவிடம் 'எதிரொலி"க்காக 'மினி பேட்டி' ஒன்றைத் தருமாறு கேட்டிருந்தேன்.

டன்ரன் துரைராஜாவிடம் நான் கேட்ட முதலாவது கேள்வி: "இந்த ரொறன்ரோ பல்கலைக்கழக தமிழ் இருக்கையின் மூலம் எத்தகைய பலன்கள் கிட்டும்?" என்பதுதான். அதற்கு அவர் தந்த பதில் மிகவும் நீளமானது. அதை சுருங்கச் சொன்னால் -

"கனடாவில் தமிழ் குறித்த ஆய்வுகள் தொடர ரொறன்ரோவில் அமையும் தமிழ் இருக்கையானது காத்திரமான பங்களிப்பை வழங்கும். அதேசமயம் கனடாவில் வாழும் தமிழ்ச் சமூகத்தின் அபிலாஷைகளுக்கு ஏற்றவகையிலும் அது தன்னை வைத்திருக்கும் என்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு" - என்றார் டன்ரன் துரைராஜா.

ரொறன்ரோ தமிழிருக்கையை ஆரம்பிக்க 3 மில்லியன் கனடியன் டொலர்கள் (அவுஸ்திரேலியப் பணம் சுமார் 3,164,829 டொலர்கள்) வைப்புத்தொகையாக திரட்டப்பட வேண்டியிருந்தது. அதனை அனைவரும் இணைந்து மிகக் குறுகிய காலத்தில் திரட்டிக் காட்டியிருக்கிறோம்.

"யார் யார் நிதியுதவி தந்தார்கள்?" என்று டான்ரனிடம் கேட்டபோது -

"தமிழகத்தினரினதும் மற்றும் நமது புலம்பெயர் ஈழத்தமிழரினதும் கூடவே உலகளாவிய நிலையில் பல்வேறு தமிழ் ஆர்வலர்களினதும் நிதியுதவியினால்தான் இது சாத்தியமாயிற்று. அவர்களின் பெயர்களை ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் இணையப்பக்கத்தில் காணலாம். தி.மு.க. மட்டுமல்ல இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த அ.தி.மு.க.வினரால்கூட - தமிழக அரசு சார்பில் - ரொறன்ரோ தமிழ் இருக்கைக்காக ஒருகோடி இந்திய ரூபாய்கள் வழங்கப்பட்டன" - என்றார்.

இந்த முயற்சியை நிறைவேற்றப் பாடுபட்ட தமிழகத்தவர், ஈழத்தமிழர் பலரையும் டான்ரன் வரிசைப்படுத்திக் குறிப்பிட்டார். எஸ்ஜேவி செல்வநாயகம் அறக்கட்டளை, தமிழக முன்னாள் அமைச்சர் கே. பாண்டியராஜன் எனத் தொடங்கி, அவர் குறிப்பிட்ட பெயர்கள் அனைத்தையும் இங்கு அச்சிடுவதென்றால் இடம் போதாது. உலகப்புகழ் பெற்ற - தமிழ்க் கனடிய - எழுத்தாளர் அ.முத்துலிங்கம் பம்பரமாய்ச் சுழன்று சகல மட்டங்களிலும் நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருக்கிறார். "முத்துலிங்கம் ஸேர் இந்த ரொறன்ரோ தமிழ் இருக்கைக்கான நிதிசேரிப்பிற்கு ஒரு தனிப் பரிமாணத்தையே உருவாக்கித் தந்தார்" - என்று புகழ்ந்தார் டான்ரன். தான் அங்கம் வகிக்கும் கனடியத் தமிழர் பேரவையின் தலைவரான சிவன் இளங்கோவின் இடைவிடாத அயராத உழைப்பையும் முதன்மைப்படுத்தி குறிப்பிட டான்ரன் தவறவில்லை. இவர்கள் பெயர்கள் கனடாத் தமிழர் வரலாற்றில் என்றும் பதியப்பட்டிருக்கும்.








இவ்வாறாக, பல பெரும் விடயங்களுக்குப் பின்னாலிருந்து உழைக்கும் டான்ரன் போன்றவர்களின் தன்னலம் கருதாத அயராத உழைப்பினால்தான் தமிழ்க் கனடியர்கள் பல விடயங்களை சாதிப்பது சாத்தியமாகிறது. பல திட்டங்களுக்குக்கான புகழை கடைசி நிமிடத்தில் பாராளுமன்ற உறுப்பினராயிருப்பவர்களும், சட்ட மன்ற, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் எடுத்துக் கொள்கிறார்கள் என்றாலும் உண்மையில் பின்னணியில் இருந்து அழுத்தம் கொடுக்கும் பலரது பெயர்கள் வெளியுலகிற்கு அதிகமாகத் தெரியவருவதில்லை.

இது ஒரு புறமிருக்க -




கல்வி சம்பந்தமான இன்னுமொரு மைல்கல்லும் ஒன்ராறியோவில் நாட்டப்பட்டுள்ளது. அதனை ஈழத்தமிழர்களின் ஒரு அரசியல் சாதனையாகவும் கவனிக்க முடியும். அது என்ன?

ஒன்ராறியோ சட்டமன்றத்தில் ஒரு தனிநபர் பிரேரணையாக கொண்டுவரப்பட்டு, அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடனும் நிறைவேற்றப்பட்ட Bill- -104 என்ற கல்வி தொடர்பான சட்ட வரைவே அதுவாகும். இந்த சட்டவரைவின்படிக்கும் மே மாதம் 18 முடிவுக்கு வரும் ஒருவார காலம் "தமிழ் இனப்படுகொலை அறிவூட்டல் வாரம்" (Tamil Genocide Education Week) எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI



# மன்னார் பெண்களால் இதுவரை சொல்லப்படாத கதைகள்

எம். ரிஷான் ஷெரீப்

இலங்கையின் வட மாகாணத்தில் அமைந்துள்ள மன்னார் நகரமானது, மன்னார் மாவட்டத்தின் பிரதான மையமாகும். பிரபலமான மடு ஆலயம் இங்குதான் அமைந்துள்ளது. இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள ராமேஷ்வரம் பகுதிக்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ள இந்தத் தீவுத் தொகுதியில் பெரும்பான்மையாக வசிப்பவர்கள் கத்தோலிக்கர்கள் என்ற போதிலும், இன, மத ரீதியாக பல்வேறு கலாசாரங்களைப் பின்பற்றும் பல்வேறு தரப்பட்ட மக்களும் இங்கு வாழ்ந்து வருகிறார்கள். வெவ்வேறு அடையாளங்களோடு பல சமூகங்கள் இங்கு வாழ்ந்துவரும் போதிலும், செய்யும் தொழில், மொழி போன்றவற்றால் அவர்களது சமூக வாழ்வியல் ஒன்றாகப் பிணைக்கப்பட்டே காணப்படுகிறது.

நீண்ட நெடுங்காலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இலங்கையின் தனித்த மூலையொன்றில் அமைந்திருக்கும் இந்தத் தீவின் மக்களுக்கு, இன்றும்கூட அமைதியான - இயல்பான - வாழ்க்கை மறுக்கப்பட்டிருக்கிறது. இவற்றிடையே இங்குள்ள பெண்களும் பல்வேறு மட்டங்களில், பலவிதமான துன்புறுத்தல்களுக்கு தினந்தோறும் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். கீழே தரப்பட்டுள்ள அனைத்தும், அவ்வாறான ஒடுக்குமுறைகளுக்கு ஆட்பட்டுள்ள



சஞ்சுலா பீற்றர்ஸ்

பெண்கள் இதுவரை வெளியே சொல்லாத வாக்குமூலங்களாகும்.

நவீன உலகில் பெண்கள் எதிர்கொள்ள நேரும் பிரச்சினைகள் மிகவும் குறைந்துள்ளதாக மார்தட்டிக் கொண்டபோதிலும், இன்றும் புராதன காலத்தைப் போலவே, பெண்கள் தமது சமூகத்துக்குள்ளேயே நிறைய பிரச்சனைகளை தினந்தோறும் சந்தித்துக் கொண்டே இருக்கிறார்கள் என்பதற்கு மன்னாரில் வசிக்கும் இந்தப் பெண்களின் கதைகள் ஒரு உதாரணம் மாத்திரமே.

இவ்வாறு உலகறிய வேண்டியதும், உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதும், விரைவில் தீர்க்கப்பட வேண்டியதுமான பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை, சம்பந்தப்பட்ட பெண்களுடன் கலந்துரையாடி சமூகத்திற்கு வெளிக்கொண்டு வந்திருக்கிறார் சமூக சேவகியும், பெண் சட்டத்தரணியுமான சஞ்சுலா பீற்றர்ஸ்.

இதை வாசிக்கும் தமிழ் சமூகம், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற ஆதங்கத்தோடு அந்த உரையாடல்களை தமிழில் தந்திருக்கிறேன்.

**ரோஸ்மேரி:** "எனது கணவன், நான்கு பிள்ளைகளோடு என்னைக் கைவிட்டுச் சென்ற போது மூத்த பிள்ளைக்கு 13 வயது. ஆரம்பத்தில் பிள்ளைகளோடு தெருவோரம் வசித்து வந்தேன். பிறகு பாடுபட்டு ஒரு குடிசையை அமைத்துக் கொண்டேன். கடலில் இறால்களையும், கடலட்டைகளையும் பிடித்துத்தான் வாழ்ந்து வருகிறேன். இந்தப் பிரதேசத்திலுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட குடும்பத் தலைவிகள் பெரும்பாலானோரின் ஜீவனோபாயத் தொழில் அதுதான். இருந்தாலும் தொழிலுக்குத் தேவையான எவ்விதமான உபகரணங்களும் இல்லாமல்தான் அவர்கள் அனைவருமே தமது தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். தமது கைகளைக் கொண்டே அவர்கள் இவற்றைப் பிடிக்கிறார்கள். ஆகவே, அடிக்கடி பல விபத்துக்களைச் சந்திக்கிறார்கள்.



"குடும்பத் தலைவி, மீனவத் தொழிலில் ஈடுபடும் பெண்ணொருத்தி ஆகிய பொறுப்புகளைக் கொண்டுள்ள பெண் என்ற காரணத்தால் பலவிதமான ஒடுக்குமுறைகளுக்குநான்அடிக்கடி ஆளாகிக் கொண்டிருக்கிறேன். எதிர்கொள்ளும் பிரச்சனைகளை எடுத்துக்கூற நான் முன்வரும்போது, 'அதைப் பற்றிப் பேச ஒரு பொம்பளையான நீ ஏன் முன்வருகிறாய்?' என என்னிடம் கேள்வி கேட்கிறார்கள். பெண்ணாக இருப்பதாலேயே பிரச்சினைகளை எதிர்கொள்ளும்போது நான் அவமானப் படுத்தப்படுகிறேன்.

"ஆண்களை மாத்திரம் உறுப்பினர்களாகக் கொண்டுள்ள இப்பிரதேசத்தின் மீனவர் சங்கமானது, மீனவத் தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு உதவி செய்ய முன்வராத காரணத்தால், பெண்களால் மகளிர் மீனவர் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. எமது மகளிர் மீனவ சங்கத்தால் வீடற்ற ஒரு குடும்பத்துக்கு வீடு கட்ட உதவி செய்தோம். பிரதேசத்தின் ஆண்கள் மீனவர் சங்கமானது, நாம் அவர்களை மீறிச் செயல்படுகிறோம் என்று எம்மை அவமதித்து இடையூறு விளைவித்தது.

"எமது ஊரில் அமைந்துள்ள கடற்படைத் தளத்தின் அனுமதி இல்லாவிட்டால், எமக்கு கடலில் இறங்க அனுமதி கிடைப்பதில்லை. இரவில்தான் கடல் அட்டைகளைப் பிடிக்க முடியும். அந்த நேரத்தில் கடற்படை எமக்கு கடலுக்குப் போக அனுமதி தருவதில்லை. கடற்படை முகாமைச் சுற்றியுள்ள பகுதியை துப்புரவாக்கிக் கொடுத்தாலே கடலுக்குப் போக அனுமதியளிக்கும். இந்தக் கடல்தொழிலால்தான் நாங்கள் வாழ்ந்து வருகிறோம். ஆகவே, அவர்களுக்குத் தெரிவிக்காமல் கடலுக்குச் சென்று வந்ததை அவர்கள் அறிந்து கொண்டால், எம்மிடம் ஐந்து கொப்பிகள், பத்துக் கத்திகள், கண்ணாடிக் குவளையொன்று, மின்சூள் விளக்கொன்றை வாங்கித் தருமாறு விதவைப் பெண்களான எங்களைக் கட்டாயப்படுத்துகிறார்கள். இவ்வாறான இடையூறுகளால் எம்மால் எமது வாழ்க்கையைக் கொண்டு செல்ல முடிவதில்லை.

"இந்தக் காலத்தில்தான் கடலட்டைகள் அதிகளவில் அகப்படும் என்ற போதிலும் இதுவரை எமக்கு கடலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்படாததால், ஏனைய மீனவர்கள் நாங்கள் தொழிலில் ஈடுபடும் எமது எல்லைக்குள்ளிருக்கும் கடலட்டைகளைப் பிடித்துச் செல்கிறார்கள்.

"தலைமன்னாரிலிருந்து வரும் ட்ரோலர் கப்பல்களும் எல்லாவற்றையும் பிடித்துக் கொண்டு போவதோடு, அவற்றுடனே எமது வலைகளையும் அறுத்துக் கொண்டு போய் விடுகின்றன. அவ்வாறான நாட்களில் எமக்கு எதுவுமே கிடைப்பதில்லை. நாங்கள் வெறுங்கையுடன் வீட்டுக்குப் போக நேரும். அதனால், வலை வாங்கவென எடுத்த வங்கிக் கடனைச் செலுத்த வழியற்று சிலர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

"நாங்கள் பெண்கள் என்பதால் இவ்வாறான தொந்தரவுகளும், இடையூறுகளும் தொடர்ந்தும் நடந்து கொண்டேயிருக்கின்றன.

ஆதரவற்று தனித்துப் போன பெண்களான நாங்கள், எமது சுய முயற்சியில் வாழ்க்கையைக் கொண்டு செல்ல மீனவத் தொழிலில் ஈடுபட்டுள்ள போதிலும் எமக்கு அதை ஒழுங்காகச் செய்வதற்கான வாய்ப்பேயில்லை"



**அப்துல் கஃபூர் நஜீபா:** "நான் 2001 ஆம் ஆண்டிலிருந்து காதி நீதிமன்றத்துக்கு போய் வருகிறேன். பெண்ணின் வாக்குமூலத்தைக் கேட்க அங்கே பெண்ணொருவர் நியமிக்கப்பட்டிருப்ப தில்லை. ஆகவே, எமது பிரச்சினைகளை அங்கு எம்மால் வெளிப்படையாகக் கதைக்க முடிவதில்லை. ஆண்களிடம் கூறமுடியாதவற்றை வெளிப்படையாக முறையிட்டுக் கூற, அங்கு எவரும் இருப்பதில்லை. பெண்களின் கண்ணீர்க் கதைகளை காதி நீதிமன்றத்தில் கூறப் போய் பெண்கள் மிகவும் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு கூறப் போய் காதி நீதிமன்றத்தில் வைத்து காதி நீதவானே என்னை தூஷண வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தியிருக்கிறார். குறைந்தபட்சம் நாங்கள் யாரென்றுகூட அவர் விசாரிப்பதில்லை. நாங்கள் அனைவரும் சுய மரியாதையோடு வாழ வேண்டும். காதி நீதிமன்றத்தால் எனக்கு எந்த வித நீதியும் வழங்கப்படாத காரணத்தால் இப்போதெல்லாம் நான் காதி நீதிமன்றம் செல்வதில்லை.

"பொலீஸும் ஆண்களின் பக்கமே சார்ந்திருக்கிறது. பொலீஸுக்குப் போனாலும் எம்மிடம் பணம் இருந்தால் மாத்திரமே உரிய நடவடிக்கை எடுப்பார்கள். அங்கும் பெண்ணென்ற காரணத்தால் கீழ்த்தரமாகத்தான் நடத்துவார்கள். ஐந்து வருடங்களுக்கு முன்பு நான் ஒரு முறைப்பாடு கொடுக்கப் போயிருந்த வேளையில் அங்கிருந்த பொலீஸ் அதிகாரிகள் மிகவும் மோசமான விதத்தில் என்னிடம் கதைத்தார்கள். 'நீங்கள் பொலீஸ் என்பதால்தானே இப்படியெல்லாம் பேசுகிறீர்கள். பெண்கள் விளையாட்டுப் பொருட்களில்லை. எங்களுக்கும் சுய கௌரவம் இருக்கிறது. அதனால் என்னிடம் இவ்வாறெல்லாம் பேச வேண்டாம்' - என்று கூறி விட்டு வந்தவள்தான். அதற்குப் பிறகு ஒருபோதும் நான் எந்தப் பிரச்சினைக்கும் பொலீஸுக்கே போகவில்லை.

"நான் வாழும் சமூகத்திடமிருந்து எவ்விதமான உதவி உபகாரங்களும் கிடைக்கப் பெறாததால் நான் இப்பிரதேசத்திலுள்ள மகளிர் சங்கமொன்றில் இணைந்திருக்கிறேன். இணைந்ததன் பிறகு எனக்கு உதவி கிடைத்தது. நான் பிள்ளைகளுக்காகவே வாழ்ந்துகொண்டிருக்கிறேன். பிள்ளைகளை வாழ வைப்பதற்காகவே பாடுபடுகிறேன். நாங்கள் ஆணின் துணையற்று தனித்து வாழும் பெண்கள் என்பதால் அனுபவிக்க வேண்டிய அனைத்து அநீதங்களுக்கும் முகம்கொடுத்துக் கொண்டிருக்கிறோம்"

(18ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் பெண்களால் இதுவரை சொல்லப்படாத கதைகள்

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)



**டிலானி குரூஸ்:** "நான் நகர சபை உறுப்பினர். எமது நகர சபையிலிருக்கும் 16 உறுப்பினர்களில் பெண்கள் மூவர் இருக்கிறார்கள். நான் தமிழ் பேசும் பெண்ணாக, அரசியலில் ஈடுபட்டுள்ளதால் சமூகத்தில் வேறுபாடுகள் காண்பிக்கப்படுகின்றனஃ அரசியல் கட்சி மீதுள்ள வெறுப்பால் அவ்வாறு செய்யப்படுவதில்லை. பெண்ணாக இருப்பதாலேயே அவ்வாறு செய்யப்படுகிறது. பெண்களான நாங்கள் நகரசபை உறுப்பினர்களாகியுள்ளதால் எம்மை மனரீதியாகத் துன்புறுத்த, அவதூறு கூறுகிறார்கள். 'பொம்பளைதானே நீ, உன்னால் என்ன செய்ய முடியும்?' என்று கேட்டிருக்கிறார்கள்.

"அரசியலில் ஈடுபட்டுள்ள சில ஆண்கள் எமது நடத்தை குறித்து பலவிதமான அவதூறான கதைகளை சோடித்து சமூகத்தில் பரப்பி விடுகிறார்கள்.

அவற்றுக்கு அன்றாடம் முகம்கொடுத்தவாறே பணிபுரிவதென்பது மிகுந்த மன அழுத்தத்தைத் தருகிறது. ஒரு பெண்ணைப் பற்றி அவ்வாறு மோசமான கதைகளைப் பரப்பிவிட்டால் பெண்கள் பயந்துபோய் அடங்கிவிடுவார்கள் என்று அவர்கள் கருதிக் கொண்டிருக்கக் கூடும். பெண்களை அரசியல் ரீதியாக முன்னேற விடாமல் வீட்டுக்குள்ளேயே முடக்கி வைப்பதுதான் அவர்களது விருப்பம்.

நாங்கள் நான்கு வருடங்களுக்கே பதவி வகிக்கப் போகிறோம். பதவி வகிக்கும் எமக்கே இந்த நிலைமை என்றால், இந்தப் பதவிக் காலம் முடிந்தபிறகு சமூகப் பிரச்சினைகளில் தலையிட முடியாமலே போய்விடும்.

"எமது நாட்டில் பெண்கள்தான் அதிகம் பேர் இருக்கிறார்கள். நாங்கள் அவர்களுக்காக சேவை செய்யவே பாடுபடுகிறோம். நாங்கள் குரல் எழுப்புவது சிறுவர்களினதும், பெண்களினதும் பிரச்சினைகளுக்காக என்பதை அறிந்திருந்தும் சில பெண்கள் எமக்கெதிராகப் பேசுகிறார்கள். பெண்களே பெண்களுக்கு எதிராக - ஆணாதிக்கத்துக்கு ஆதரவாக - வேலை செய்கிறார்கள்.

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை பெண்கள்தான் வெளிக்கொண்டு வரவேண்டும். பெண்களால் சாதிக்க முடியும் என்று தைரியமூட்ட வேண்டும். பெண்களுக்கு அரசியல் உரிமையை வழங்கவே வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு சமூகத்தைக் கொண்டுவரவேண்டும்.

நாங்கள் இன்று செய்யும் இந்தப் போராட்டம் எப்போதாவது ஒருநாளில் மற்றுமொரு பெண்ணுக்கு பலமாக அமையும் என்று நம்புகிறேன்"



**அந்தோனி அம்மா:** "பொலீஸ்/க்குப் போனாலும் நேரடியாக எமது முறைப்பாடுகளை முன்வைக்க முடியாது. அதிகாரிகள் அனைவரும் சிங்கள மொழி பேசுபவர்கள் என்பதனால் மொழிபெயர்ப்பாளர் ஒருவர் ஊடாகத்தான் எமது பிரச்சனைகளை எடுத்துக் கூற வேண்டியிருக்கிறது. மொழிபெயர்ப்பாளர் அவர்களிடம் என்ன சொல்கிறார், அதைக் கேட்டு சிங்களத்தில் என்ன எழுதிக் கொள்ளப்படுகிறது என எதுவும் எமக்குத் தெரியாது. மொழிபெயர்ப்பாளர் ஒரு சொல்லையெனும் தவறாகச் சொல்லி விட்டால் நாம் கூறியதற்கு முற்றிலும் மாறுபட்ட விடயங்கள் குறித்துக் கொள்ளப்படலாம், இல்லையா? ஆகவே விசாரணை நடக்கும்போது உரிய மொழி அல்லாத காரணத்தால் நாங்கள் பலவிதமான சங்கடங்களை எதிர்கொள்ள நேர்கிறது.

"மன்னாரின் பிரதான தொழில் மீனவத் தொழில் ஆகும். பொதுவாக ஆண்கள் மீனவத் தொழிலில் ஈடுபடுவதோடு பெண்கள் இல்லத்தரசிகளாக இருப்பார்கள். பெண்கள் சொந்த வீடு கட்டுவது போன்ற பல்வேறு அத்தியாவசியத் தேவைகளுக்காக பல நிறுவனங்களிடமிருந்தும் கடன் வாங்க முன்வருகிறார்கள். அந்த நிறுவனங்களும் பெண்களை இலக்காகக் கொண்டே கடன்களை வழங்குகின்றன. இன்னும் அதிக வட்டிக்கு பிற ஆட்களிடமும் பெண்கள் கடன் வாங்குகிறார்கள். தங்க நகையை அடகு வைத்து பணம் பெறுகிறார்கள். இவ்வாறாக, கடன் பிரச்சினை மன்னார் பெண்கள் எதிர்கொள்ளும் பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

"இந்தப் பிரச்சினையைத் தீர்த்துத் தருமாறு கோரி நாங்கள் பிரதேச சபை அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம்கூட நடத்தியிருக்கிறோம். எனினும், நாங்கள் பெண்கள் என்ற காரணத்தால் எமது பிரச்சினைகள் அவர்களால் பொருட்படுத்தப்படவேயில்லை.

"மன்னார் பிரதேச பெண்கள் ஈடுபட விவசாயம், கைத்தொழில்கள் அல்லது வேறு தொழில் வாய்ப்புகள் எதுவுமேயில்லை. குடும்பங்களில் ஆண்கள்தான் சம்பாதிக்கிறார்கள். பெண்களிடம் பொருளாதார பலம் இல்லாத காரணத்தால் கணவனிடம் ஒரு அடிமையைப் போல இருக்க நேர்ந்திருக்கிறது.

இல்லாவிட்டாலும், பெண் என்ற காரணத்தால் எதிர்கொள்ள நேரும் ஒடுக்குதல்கள், அநீதிகளும் முடிவேயில்லாமல் இருக்கின்றன"

**அன்டன் ஜோய் செல்வநாயகி:** "என்னுடைய கணவர் ஒரு மாற்றுத் திறனாளி. அவரால் நடக்க முடியாது. சக்கர நாற்காலியில் அமர்ந்திருப்பார். அவரை அங்கே, இங்கே அழைத்துப் போய் வர ஒவ்வொரு நாளும், ஆட்டோ வைத்திருப்பவர்களிடம் உதவி கேட்க நேர்ந்தது. அவ்வாறு உதவி செய்ய முன்வரும் ஆண்கள் என்னிடம் வேறு விடயங்களை எதிர்பார்த்துத்தான் அவ்வாறு எமக்கு உதவி செய்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டதன் பிறகு, 'எனக்கு ஆட்டோவை ஓட்டத் தெரிந்திருந்தால் எவரது உதவியும் தேவைப்படாது அல்லவா?' என்று தோன்றியது.

"நான் ஆட்டோ ஓட்டக் கற்றுக் கொண்டேன். ஆட்டோவுக்குள் எனது கணவரை ஏற்றக்கூட நான் எவரது உதவியையும் எதிர்பார்ப்பதில்லை. நான் பெண் என்பதால் என்னால் அவரைத் தூக்கிச் சுமக்க முடியாது என்றே எல்லோரும் நினைக்கிறார்கள். ஆனால், நான் தனியாகத்தான் அவரைத் தூக்கிச் சுமந்து ஆட்டோவில் ஏற்றிக் கொள்கிறேன். திடீரென்று ஆட்டோ செயலிழந்து போனால், எவ்வாறு பழுதுபார்ப்பது என்றும் நான் கொஞ்சம் கொஞ்சமாக கற்றுக் கொண்டேன்.

"நான் தண்ணீர் மோட்டார்களை பழுது பார்க்கிறேன். மின்சார வேலைகளையும், கட்டுமான வேலைகளையும் செய்கிறேன். ஆட்டோ ஓட்டாத நேரங்களில் விற்பதற்காக ஆடைகளைத் தைத்து வருகிறேன். சில நிறுவனங்களிலிருந்து தாமாகவே, உதவி செய்யவென



வந்தார்கள். அவர்களிடம் 'எம்மால் ஏதாவது உழைத்துக் கொள்ள முடியும். எம்மை விடவும் நிர்க்கதியிலுள்ள - எதுவுமே செய்ய வழியில்லாதவர்களுக்கு - அந்த உதவிகளைச் செய்யுங்கள்' - என்று நாங்கள் கூறினோம்.

"மன்னார் பிரதேசத்திலேயே ஆட்டோ ஓடும் ஒரே பெண் நான்தான். நான் ஆட்டோ ஓட்டுவதைப்பார்த்து, ஆட்டோ ஓட்டும் ஆண்கள் கேலி செய்கிறார்கள். நான் பெண் என்பதால் எவரேனும் அவ்வாறு என்னைக் கேலி செய்யும்போது நான் அவரிடம் 'எனக்கு ஆட்டோ ஓட்டத் தெரியும். உங்கள் மனைவிக்கும் வாகனம் ஓட்ட கற்றுக் கொடுங்கள்' - என்று உபதேசிப்பேன்.

"எனது கணவர் எனக்கு மிகவும் உறுதுணையாக இருக்கிறார். நான் உறுதியான பெண் என்று அவர் அடிக்கடி கூறுகிறார். சமூகத்தில் என்னைப் பற்றி பேசப்படும் அவதூறுகளை அவர் பொருட்படுத்துவதில்லை. நாங்கள் இருவரும் திருமணம் முடித்து இப்போது 20 வருடங்கள் ஆகின்றன. நான் பணம் சேர்த்து 'ஆண்கள் மாத்திரம் ஓடக் கூடியது' என எல்லோரும் எண்ணியிருக்கும் பெரிய மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கியிருக்கிறேன். நான் பெரிய மோட்டார் சைக்கிள் ஓட்டுகிறேன் என்று எனது கணவரின் சகோதரர்கள் அவருடன் கதைப்பதில்லை.

"ஒரு நாள் போக்குவரத்து பொலீஸார் எனது மோட்டார் சைக்கிளைத் துரத்தி வந்து 'நீ ஒரு பெண் என்பதால் இவ்வாறான பெரிய மோட்டார் சைக்கிள்களை ஓட்டக் கூடாது. பெண்களுக்கு அது பொருந்தாது. வேண்டுமென்றால் ஸ்கூட்டர் சைக்கிளொன்றை ஓட்டு' - என்றார்கள். 'நீங்கள் வேண்டுமென்றால் உங்கள் மனைவிக்கு ஸ்கூட்டி ஒன்று வாங்கிக் கொடுங்கள். இது நான் பாடுபட்டு உழைத்து சம்பாதித்த பணத்தில் வாங்கிய மோட்டார் சைக்கிள். இதை ஓட்ட எனக்கு உரிமை இருக்கிறது. அதைத் தடுக்க நீங்கள் யார்?' என்று அவர்களிடம் கேட்டேன். பிறகு பொலீஸ்/க்குப் போய், அவர்களுக்கு எதிராக முறைப்பாடு கொடுத்தேன். இங்குள்ள அநேகமான பெண்கள் என்னைப் பாராட்டுகிறார்கள். 'அக்கா, உங்களைப் போல நாங்களும் ஆக வேண்டும்' - என்கிறார்கள். சில ஆண்களும்கூட என்னைத் தாண்டிப் போகும்போது பாராட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள்"


ஆதிவாசி கனக துர்க்க பூசாரி
பண்டித் லக்ஸ்மன் ராஜ்
கைரேகை, முகம், புகைப்படம் பார்த்தல்
வியாபார பிரச்சினைகள்
குடும்பப் பிரச்சினைகள்
விவாகரத்துப் பிரச்சினைகள்
பணப் பிரச்சினைகள்
காதல் பிரச்சினைகள்
திருமணப் பிரச்சினைகள்
எதிரிகள் பிரச்சினைகள்
அதிஸ்டம் போன்றவைகள்...
100% SATISFACTION GUARANTEED
நம்பிக்கைதான் வாழ்க்கை
* ஒருமுறை நேசித்தவரை மீண்டும் கொண்டுவரக்கூடிய நிபுணத்துவம் வாய்ந்தவர் *
உங்களுக்கு பிரச்சினை உண்டா? நான் தீர்வு வைத்திருக்கிறேன்
முன்பதிவுகளுக்கு:
0413 883 998, 0469 300 470
10/130 Pendle way,
Pendle Hill, NSW 2145


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052

# கனடிய தமிழர்களின் சாதனைகள்!

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது, இந்த ஒரு வார காலத்தில் ஒன்ராறியோவிலுள்ள பாடசாலைகளில் இலங்கையில்நடைபெற்றஇனப்படுகொலை சம்பந்தமான அறிவூட்டல்கள் நடைபெற ஒன்ராறியோ மாகாண அரசு சட்டபூர்வ அங்கீகாரம் தந்திருக்கிறது.

இந்த Bill *104* சட்டமூலம் குறித்துத் தான்முன்பொருமுறைஸ்ரீலங்காபாராளுமன் றத்தில் வடமாகாண முன்னாள் ஆளு-னரும், நியமன உறுப்பினருமான சுரேன் ராகவன்பேசியஒருபேச்சுஇங்குஅனலைக் கிளப்பி ஓய்ந்திருந்தது.

“இந்தBill*1041* சட்டவரைவுஇலங்கையர்கள்தமது தாய்நாட்டிற்குச்செய்யும்தேசத் துரோகம்” - என்ற ரீதியில் சுரேன் ராகவன்அப்போதுஆட்சேபம்தெரிவித்திருந் தார். அதனால் அந்தப் பேச்சை புலம் பெயர்தமிழர்கள்ஒருகௌரவப்பிரச்சனையாகஎடுத்துக்கொண்டார்கள்ஒன்ராறியோவில் இந்த சட்டவரைவை நிறைவேற்றியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு, இங்குள்ள சில அமைப்புக்கள் ஒன்ராறியோ மாகாண அரசிற்கு கடும் அழுத்தங்களைத் தந்ததால்தான் இது சாத்தியமானது. இதற்கானபெருமையைBill*104* பிரேரணையை சட்டமன்றத்திற்குஎடுத்துவந்தஸ்காபரோ ரூஜ் பார்க் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான விஜய் தணிகாசலம் பெற்றுக் கொண்டாலும், இதன் பின்னணியில் இருந்து உழைத்தவர் பலர்.

அடுத்து -

கனடாவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு சினிமா முயற்சி ஒன்றைப் பற்றிச் சிலவரிகள்.

*100*M Criminal Conviction என்ற ஆங்கிலத் திரைப்படம் தற்போது அமேசன் பிரைம் ஊடாக வெளியாகியிருக்கிறது. ஒரு பெண்ணின் திட்டமிட்ட பழிவாங்கல் காரணமாக அநியாயமாக சட்டக் குற்றவாளியாகிவிடுகிறான் ஒருவன். ஏன்? எப்படி?

த்ரில்லர் வகை திரைப்படமாக உருவாகியிருக்கும் இந்த ஆங்கிலத் திரைப்படத்தை கனடியத் தமிழர்கள் பலரும் ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். காரணம் இந்தப் படத்தை கதை எழுதி இயக்கியிருப்பவர் ஒரு தமிழ்க் கனடியர். பெயர் கதி. செல்வகுமார். (இந்தப் பெயரை லண்டனில் நடைபெற்ற அம்பிகையின் உண்ணாவிரத காலத்தில் கேள்விப்பட்டிருப்பீர்கள்) இந்தத் திரைப்படமும் கனடியத் தமிழர் வரலாற்றில் ஒரு மைல் கல்லேதான். ஆம். முதன் முதலாக ஒரு முழுநீள ஆங்கிலப் படம் ஈழத்தமிழன் ஒருவனால் எழுதி, இயக்கி, தயாரிக்கப்பட்டு, அமேசன் பிரைம் மூலம் வெளியாகி உலகளாவிய ஆங்கில சினிமா ரசிகர்களின் பார்வைக்காகத் தரப்பட்டிருக்கிறது.

இவற்றைப் போலவே இன்னும் பல மைல்கல்கள் இங்கு நடப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை அடுத்த அடுத்த ‘எதிரொலி’யில் காண்போமே!

PARISH PATIENCE IMMIGRATION LAWYERS
FOUNDED 1888
IMMIGRATION LAW ACCREDITED SPECIALIST
MIA Migration Institute of Australia

Our large legal team provideds a full range of specialist immigration legal services no matter where you are in the world at competitive rates


Michael T. Jones
Legal Practice Manager
Accredited Specialist in Migration Law
MARN: 9255530
Email: MTJONES@ppilaw.com.au


Mahalingam (Shan) Sutharshan
LL.B (Col), LL.M (Monash), LL.M (ANU).
Director
MARN: 0961664
Email: SHAN@ppilaw.com.au


Prasad Pahalawela
Solicitor & Migration Agent
MARN: 12800846
Email: PRASADP@ppilaw.com.au


Ashwina Krishnan
Solicitor & Migration Agent
MARN: 1913008
Email: ASHWINAK@ppilaw.com.au

Non - Immigration Matters
- Family Law & Divorce Application
- Criminal Law
- Traffic Offences
- Commercial & Business Law

Our professional provide expert assisstance with:
- Business & Investment Visas SC188, 888, and 132
- Student SC500 and Student Dependent Visa
- SC485 (TR) and SC485 Dependent Visa
- General Skilled Migration (GSM) SC189, 190 and 489 Visa
- Skilled Assessment, SkillSelect, EOI
- State Sponsorship and Nomination
- ENS (SC186), RSMS (SC187) and TSS (SC482)
- Refugee & Asylum Seekers SC866
- Temporary Protection Visa SC785
- Safe Haven Enterprise Visa (SHEV) SC790
- Family, Partner, Child, Parent, and Carer Visa
- Visitor SC600 and Working Holiday Visa
- Distinguished Talent Visa
- Citizenship and Resident Return Visa
- Administrative Appeal Tribunal (AAT)
- Federal Circuit Court, Federal Court & High Court
- Visa Cancellation, Detention and Deportation
- Health, Character & Identity Issues (PIC4020)
- All other visas and Immigration matters
- Commercial and Property matters

Lawyers and Registered Migration Agents: T. Nguyen: Director & MARN: 0322836 | A. Dougall Lawyer & MARN: 1684660 | A Shah MARN: 1801710 | A Charif: MARN: 1803234
Parish Patience Immigration Lawyers | Level 3, 83 York Street Sydney NSW 2000 | Tel: +61 02 9286 8700 | E: PPMAIL@ppilaw.com.au | W: www.parishpatience.com.au

எஸ்.எஸ். ஜோதிட நிலையம்
பண்டித்: தேஜா ஜி
PANDIT: TEJA JI

உலகப் பிரசித்தி பெற்ற இந்தியாவின் பரம்பரை கைரேகை ஜோதிடரைச் சந்தியுங்கள்.







100% சரியான கணிப்பு

- திருமண பாக்கியம்
- குழந்தைகள் பிரச்சினை
- கல்வி விஷயங்கள்
- வேலைப் பிரச்சினைகள்
- வணிக சிக்கல்கள்
- நீதிமன்ற வழக்குகள்
- அதிர்ஷ்ட எண்கள்
- லக்ஷ்மி பூஜா
- வஸ்து பூஜா
- அதிர்ஷ்ட கல்

என் தொழிலை எவராலும் உடைக்கவும் முடியாது. எனக்கு முன் எவராலும் வேலை செய்யவும் முடியாது. இது எனது சவால்.

எந்தவொரு சிக்கலையும் சரிசெய்யவும், உடைக்க முடியாத பாதுகாப்பை வழங்கவும் அவர் சக்திவாய்ந்த இந்திய பிரார்த்தனைகளை செய்கிறார்.

உலகப் பிரசித்தி பெற்ற இந்திய ஜோதிடர் பண்டித் தேஜா ஜீயைச் சந்தியுங்கள்.
உங்கள் தனிப்பட்டதோ, பொதுவானதோ அனைத்து வகையான பிரச்சினைகளையும் சில நாட்களிலேயே தீர்த்து வைப்பார்.

தீர்க்க முடியாத பிரச்சினைகளைத் தீர்த்து 100 வீதம் நம்பிக்கையை அவர் கொடுப்பார்.

சிறப்பான எதிர்காலத்துக்காக இன்றே வாருங்கள்

முற்பதிவுகளுக்கு அழையுங்கள்
0405075655
Shop No-4, Spice INN Supermarket, 16 Cleeland st Dandenong, Vic 3175

## ஊழிக்காலம்-2 22



# புயலுக்குப்பின்...

மதி ஒருகணம் கண்களை மூடி தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டாள் பின் பேச ஆரம்பித்தாள்.

"அண்டைக்கு பதினெட்டாம் திகதி. நாங்கள் பதினைஞ்சாம் திகதியே அங்க போயிற்றம். பதினைஞ்சு பேர் என்ர டீமில. நான்தான் லீடர். அது நந்திக்கடற்கரை என்பதைத்தவிர அந்த இடம் குறிப்பாக எது என்பது எங்களில் யாருக்கும் தெரியாது. எங்களைப் பாதுகாப்பு சென்றிக்கு எடுத்தால், யாரோ முக்கியஸ்தர்கள் வரப்போகிறார்கள் என்பதுதான் அர்த்தம். ஆனால் யாரென்று தெரியாது.

"பதினைந்தாம் திகதியும் இரவு பல படகுகள் நந்திக்கடலில் புறப்பட்டுப் போவதை அவதானித்தேன். எனது டீமை 'அலேட்' பண்ணிவிட்டு, அங்கிருந்த விடத்தல் பற்றைகளுக்குள் தாழ்வான இடங்களில் நாம் பதுங்கியிருந்தோம். நாற்புறமும் கண்களைக் கூசச் செய்யுமள வுக்கு ஒளிபாய்ச்சிபடி ரவைகள் கீசிக் கொண்டிருந்தன. எனினும், நாம் தேர்வு செய்து இருந்த இடம் தாராப் பள்ளங்கள் ஆகையால், ரவைகள் எங்களுக்கு மேலாகக் கடந்து கொண்டிருந்தன. இடைவிடாது எயிற்றிவண், ஆர்பீஜீ. செல்களும் விழுந்தன.

"பதினேழாம் திகதி விடிவதற்கு இன்னும் சில மணித்தியாலங்கள் இருக்கையில், எனது டீமில் நானும் ரமாவும் ரேகாவும் மீதமிருந்தோம். நந்திக்கடலோரமாக நின்ற பிள்ளைகளும், ஏன் மக்களுமே காயமடைந்தோ இறந்தோ விழுந்து கிடந்திச்சினம்.

"எனக்கு நாற்பது மீட்டர் தொலைவில ஆர்மிக்காரன். நான் மறைஞ்சு நிண்டன். எங்கட பக்கத்தால, வெள்ளைக்கொடியோட ஒரு நூறு நூற்றைம்பது பேர்வரையில, கையளைத் தூக்கிக் கொண்டு நிக்கினம். ஆர்மி அவயள 'பொறுங்கோ' எண்டமாதிரி, கையைக் காட்டிற்று திரும்பினான்"

"மம்மீ......." - அவள் மேலே சொல்லாமல் சொல்ல முடியாமல் விம்மினாள். பின் சிறிது நேரத்தில் தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டு பேசினாள்.

"அஞ்சாறு எல்.எம்.ஜீயளக் கொணந்து லாண்ட் பண்ணினான். குவியலா நிண்ட எங்கட போராளியளையும் மக்களையும் நோக்கி ஓட்டோவில சுடத் துவங்கினான். பார்க்கவே ஏலாது, நான் நந்திக்கடலுக்க பாஞ்சிட்டன். சடலங்கள விலத்தி விலத்தி, கழுத்தளவு தண்ணி வந்திட்டுது அங்கால நீந்த வலுவில்ல. எங்க போறம் வட்டுவாகலுக்கா? வற்றாப்பளைக்கா? முல்லைத்தீவுக்கா? சனம் தத்தித் தத்தி சடலங்களைத் தள்ளிக்கொண்டு, ஆர் முந்தி ஆர் பிந்தி எண்டு பாய, எங்களச் சுத்தி எதெது எண்டில்லாமல், என்னவெல்லாமோ வெடிக்கிது. என்ர கண்ணுக்கு முன்னாலயே என்னோட வந்த பிள்ளையள் மூழ்க, மூழ்கின இடத்தில குமிழி எழும்புது. நான் அதைவிட்டிட்டு நகர, எனக்குள்ள எதுவோ கடித்துச் சென்றது. ஓ... எனக்குக் காயம். நான் மூழ்கக்கூடாது என்று கரையை நோக்கி கைகளை வலிக்க, நெஞ்சுப்பகுதிக்குள் எதுவோ புகுந்து, முதுகுப்பக்கமாக வெளி-யேறுவதும் தெரிந்தது. நான் அண்ணைய நினைச்சன்.

"கண்களைத்திறக்க, என்ர முகத்துக்கு நேர நாலங்குல இடைவெளியில தன்ர முகத்தை வச்சுக் கொண்டு என்னையே பார்த்தபடி, ஒரு புலனாய்வாளன். நான் கண்களை மூடிக்கொண்டன்.

'சேர்... கொஞ்சம் பொறுங்கோ. ஒரு அரைமணி நேரம்' - என்று யாரோ சொல்வது கேட்டது. நான் கண்களைத் திறக்கவில்லை.

"மீண்டும் நான் கணகளைத்திறந்தபோது, அவன் அங்கேயே உட்கார்ந்திருந்தான்.

'ஆருக்கு அங்க சென்றி போட்டிருந்தனீ, பிரபாகரனுக்குத்தானே'

'எனக்குத் தெரியாது".

'ஏய்...நீ எஸ். ரீ. எவ் தானே"

'ஓம்'

'லீடர்'

'இல்லை'

'அப்ப அங்க ஆருக்கு சென்றி? பிரபாகரனுக்கு இல்லையா'

'தெரியாது'

'நீ அங்க என்ன பாத்தாய்'

'நாங்க முக்கியமான ஆளுக்குதான் சென்றிக்கு போவம். ஆனா நூறு மீட்டருக்கு அப்பாலதான் நிப்பம்"

'அங்க யார் நின்றது'



'தெரியாது'

"திரும்பத்திரும்ப இதே கேள்விகள். இதே பதில்கள். நான் அவன் போகும்வரை உறங்கவேயில்லை. மார்பின் கீழும், தொடையிலும், தலையிலும் பெரிய காயம்.

"உயிர் தப்பியதே பெரிய விடயம் என்றார் டொக்டர். அதுதான் எனக்குத் தேவையில்லாத விசயமாத் தெரியுது. மம்மீ முக்கியமான ஆக்கள்தான் முன்னுக்கு நிண்டவை. எனக்கு நல்லாத்தெரியும். கண்களை மூடினால் சடலங்கள்தான் தெரியுது. அலறிக் கேக்குது. வெடிக்குது. மின்னல் வெட்டுது. காதுக்குள்ள, அங்காலும் இங்காலுமாக ஆராரோ ஓடுகினம், 'படீர்' 'படீர்' எண்டு வெடிக்கிது, தலை சிதறுற மாதிரி இருக்குது மம்மீ...

"நாலு நாளைக்கு முன்னாலயே என்னை டிஸ்சார்ஜ் செய்யலாம் எண்டு சொன்னவர் டொக்டர். பிறகு, மன்னாரில ஏதோ பெண்களை பாலியல் வல்லுறவு செய்ததாக செய்தி வந்திருக்கெண்டு என்னை போக வேண்டாமெண்டிட்டார். 'ரெண்டுநாள் இரம்மா' - எண்டார். பிறகு, புனர்வாழ்வு முகாமுக்கு எண்டபடியாத்தான் அனுப்பினவர்.

"இந்த நினைவுகள்ள இருந்து எப்படி மீளப்போறன்? தலையைப் பிச்சுக்கொண்டு ஓடவேணும் போல வருது"

பார்வதி எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டபின் -

"ஏன் மீள வேண்டும். அப்படி மீளக்கூடாது. உனக்குள் வைத்து அழுத்திக் கொண்டிராமல், உன் நண்பிகளிடமும் சொல். மறுபடி மறுபடி சொல்லும்போது, அவர்களது அனுபவங்களையும் கேள். ஒன்றுக்கொன்று சமனாகவோ அல்லது முன்பின்னாகவோ இருக்கலாம். எல்லோரிடமும் தனித்தனி அனுபவங்கள், கதைகள் உண்டு பகிரப் பகிர, கொடுக்கக் கொடுக்க, அனுபவிக்க அனுபவிக்க எல்லாமே தொலைந்துபோகும்.

"மனதை ஒருநிலைப்படுத்து. வா, தியா-னம் செய்யப்பழகு, அல்லது பஜனைக்கு வா, மன வெள்ளத்தை மடைமாற்றிப் பாயவிடு. மனம் அமைதியாகிவிடும்"

"நன்றி மம்மீ, உங்களோட கதைச்சதே மனம் அமைதியான மாதிரி இருக்கு"

"எல்லாரையும் லைன் பண்ணட்டாம்" - என்று யாரோ போட்ட கூச்சல் அவர்களை அந்த இடத்திலிருந்து கலைத்தது.

தினசரி நடக்கும் விடயந்தான். எல்லோரையும் கூட்டி, எண்ணி அடுக்கி, பின் கலைத்துவிடுவார்கள். எப்படியும் தண்ணீர் வாகனம் வருமுன், இந்த வேலையை செய்து முடிக்கவேண்டும். இல்லையேல் இந்தப் பெண்களை வரிசைக்குக் கொண்டுவருவது மிகக் கடினம். ஒவ்வொரு குழுவின் தலைவியும் தத்தம் குழுவினரை ஒன்று சேர்ப்பதற்குள் அழுது விடுவார்கள்

பெண்கள் இந்த மூன்று நான்கு மாதத்துள் நன்கு மாறிவிட்டார்கள். தங்களைக் காவல் புரியும் இராணுவப் பெண்களுக்கு எதுவரையில் அதிகாரம் என்பதையும் புரிந்து கொண்டார்கள். இந்த பெண் இராணுவத்தினர் மறந்தும் இவர்களை ஏசவோ, கண்டிக்கவோ முடியாது. இவர்களை நண்பிகளாக்க வேண்டும். (மூளைச்சலவை)

முன்னர் ஒருதடவை, அந்த மண்டபத் துக்கு கப்டனுடன் இரண்டு இராணுவப் பெண்கள் பணிபுரிய வந்தனர். ஒருநாள், அவர்கள் நடைபாதையில் நின்று பேசிக் கொண்டிருந்தபோது, ஒரு பெண் அவர்களை விலக்கிக்கொண்டு போனாள்.

அப்போது ஒரு பெண்சிப்பாயின் கையை உரசிக்கொண்டு போகவேண்டியதாயிற்று. உரசப்பட்ட இராணுவப் பெண்ணின் முகம், ஏதோ மலத்தில் கைபட்டதுபோல அருவருத்துச் சுருங்கியது. அதை அங்கிருந்த சில போராளிப் பெண்கள் அவதானிக்கத் தவறவில்லை. இன்னொரு நாள், ஒரு பெண் காயப்போட்ட உடைகளை எடுத்துக் கொண்டு அவ்வழியாக வந்தபோது, அந்த உடை இராணுவப்பெண்ணின் மீது படவிட்டுவிட்டது. தற்செயலாகத்தான். ஆனால், அந்தப்பெண் சிப்பாய் துடித்துப் பதைத்து தன் கையை ஒரு துண்டால் உரசித்துடைத்தாள்.

காலப்போக்கில், அவளுக்கு ஒரு பாடம் புகட்ட சந்திரமுகி ஒருத்தி வந்தாள். அவள் அச்சம் அறியாதவள். எந்த இடத்திலும் தான் நினைத்ததை செயற்படுத்தும் தைரியம் உள்ளவள். சிறு மாணவியைப்போல தோற்றம், சுருட்டைமுடி 'டயானா-கட்' வெட்டியிருந்தாள். கலகலப்பாகப் பேசுவாள். அவளது எந்தப்பேச்சிலும் அலட்சியம் இருக்கும். இந்த ராணுவப் பெண்களின் அருவருப்புச் செய்தி அவள் காதுக்குப் போனது.

இரண்டு தினங்களுக்குள் அவள் மாட்டினாள். அப்போது, முகாமிலிருந்த பெண்களில் மூன்று நான்கு பேர் 'கேபிக்ஸ்' எனப்படும் சிரங்கினால் பீடிக்கப்பட்டிருந்தனர். இரண்டொருவர் 'ரிங்வோம்' எனப்படும் வட்டக்கடியால் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களது படுக்கை, மருந்து, குளிப்பு என்பன விசேடமாக கவனிக்கப்பட்டன.


சந்திரமுகி அவர்களில் ஒருத்தியை தயார் செய்தாள். மறுநாள் சந்திப்புக்கு வந்த பெற்றோரின் பட்டியலுடன் அவளே வந்தாள். பொதுவாக தமது பெயர் வந்திருக்கிறதா? என தெரிந்து கொள்ள பெண்கள் அவளைச் சூழ்ந்து கொள்வதுண்டு. அன்று பெயர் வாசிக்கும் கூட்டத்துள் மனோவை நகர்த்திக்கொண்டு வந்த சந்திரமுகி, அவளை அந்த ராணுவப் பெண்மீது தற்செயலாக தள்ளுண்டு விழுவது போல விழுத்தி எடுத்துவிட்டாள். நோயி-னால் பீடிக்கப்பட்டிருந்த பெண்கள் சிலரே என்பதாலும், அவர்கள் வைத்தியசாலைக்கு செல்வதாலும், அவளை நன்கு அடையாளம் கண்டு கொண்ட ராணுவப் பெண் "அனே! ஜராவ...ஜராவ" - என்று கூச்சலிட்டாள்.

எதிர்பார்த்திருந்த சந்திரமுகி "என்ன ஜராவவா...? அவள் விழுந்திட்டாள். இவள் தள்ளி விழுத்திப்போட்டாள்" - என்று கதையை மாற்றிவிட்டாள். கூடி நின்ற பெண்களும் சேர்ந்து கூச்சலிட்டனர். அருகிலேயே அலுவலகம் இருந்ததால், சார்ஜன் ஓடிவந்தாள். வந்தவள் விடயத்தைக் கேள்விப்பட்டதுமே, அந்த சிங்களப் பெண்சிப்பாயை கோபத்தோடு திட்டினாள். மாலைவரை அந்த புளொக் வாசலில் நிற்கும்படி கட்டளையிட்டாள்.

சற்று நேரத்தில் அவ்விடத்தால் அங்குமிங்குமாக போன சந்திரமுகி,

"அக்கா... ஜராவத" - என்று அவளைச் சீண்டினாள். அந்த சம்பவத்திற்குப்பின் குறிப்பிட்ட பெண் சிப்பாய் அந்தப் புளொக்கிலிருந்து மாற்றப்பட்டு விட்டாள்.

# மாத ராசிபலன்



## மேடம்

வாழ்க்கையை குறிக்கோளுடன் நடத்தி வெற்றி காணும் மேஷ ராசியினரே, இந்த மாதம் மனதிடம் அதிகரிக்கும்.அதே வேளையில் அஷ்டமத்து சனி விலகுவதன் மூலம் அதிர்ஷ்ட வாய்ப்புகள் கை கூடி வரும். தனாதிபதி சுக்கிரன் ராசிநாதன் சஞ்சாரத்தால் பணவரவு நன்றாக இருக்கும். தொழில் வியாபாரம் ஏற்றம் தரும் வகையில் இருக்கும். வியாபாரம் தொடர்பான சிறு பிரச்சனைகள் தோன்றி மறையும். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கலைத்துறையினருக்கு நன்மைகள் நடக்கும் காலகட்டம். நெருக்கடியாக இருந்த பிரச்சனைகள் நீங்கும். பணவரத்து அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள்.

## இடபம்

கொடுத்த வாக்கை உயிருக்கு மேல் மதிக்கும் ரிஷப ராசி அன்பர்களே இந்த மாதம் பணவரத்து திருப்தி தரும். அதே வேளையில் சுபச்செலவுகள் அதிகமாகும். தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களை மற்றவர்களிடம் கூறி ஆலோசனை கேட்பதோ அல்லது அதைப் பற்றி விவாதிப்பதோ நன்மை தரும். கலைத்துறையினருக்கு மற்றவர்களுக்கு உதவி செய்யபோய் தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரலாம். கவனம் தேவை. எதிர்பார்த்த வாய்ப்புகள் வந்து சேரும். அரசியல் துறையினருக்கு சிறிய வேலையும் செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு நட்பு வட்டத்தில் இருப்பவர்களுடன் கவனமாக பேசி பழகுவது நல்லது.

## மிதுனம்

எந்த ஒரு விஷயத்திலும் அவசரம் காட்டாமல் நிதானத்தைக் கடைபிடிக்கும் மிதுன ராசியினரே இந்த மாதம் அதிக முயற்சிக்கு எந்த ஒரு காரியத்திலும் லாபம் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். தொழில் விரிவாக்கம் செய்யும் எண்ணம் மேலோங்கும். குடும்பத்தில் அவ்வப்போது ஏதாவது சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு மறையும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் உண்டாகும். பெண்களுக்கு எந்த ஒரு காரியத்தையும் திறம்பட செய்து முடிப்பீர்கள். தொலை தூர தகவல்கள் நல்ல தகவலாக வரும். பயணம் செல்ல நேரலாம். புதிய வாகனம் வாங்குவீர்கள்.

## கடகம்

சிறு விஷயத்திலும் உணர்வுப் பூர்வமாக செயல்படும் கடக ராசியினரே, இந்த மாதம் வாக்கு வன்மையால் நன்மை உண்டாகும். செய்யும் காரியத்தை சிறப்பாகவும், நேர்மையாகவும் செய்து முடித்து மற்றவர்களிடம் பாராட்டு பெறுவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் வேகம் பிடிக்கும். பெண்களுக்கு காரிய தடைகள் நீங்கி எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிப்பீர்கள். அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை தொண்டர்களின் ஆதரவுடன் செயற்கரிய செயல்களைச் செய்வீர்கள். கலைத்துறையினர் கடினமாக உழைத்தால்தான் துறையில் வெற்றி வாகை சூடலாம். மற்றபடி உங்கள் வேலைகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து விடுவீர்கள்.

## சிம்மம்

தனது தோரணையாலும் சாமர்த்தியத்தினாலும் வெற்றி பெறும் சிம்ம ராசியினரே இந்த மாதம் மிக நல்ல பலன்களை பெறப் போகிறீர்கள். காரியங்களில் இருந்து வந்த தேக்க நிலை அடியோடு மாறும். தொழில் வியாபாரம் நிறைவான லாபம் வரக் காண்பீர்கள். பண வரவில் முன்னேற்றம் உண்டாகும். நண்பர்கள் மூலம் தக்க சமயத்தில் தேவையான உதவிகளைப் பெறுவீர்கள். அமைதியாகச் செயலாற்றுவீர்கள். மாணவர்களுக்கு எதிர்கால கல்வியை பற்றி சிந்தனை மேலோங்கும். கூடுதல் நேரம் ஒதுக்கி படிப்பது வெற்றிக்கு உதவும்.

## கன்னி

கன்னி – தனது உழைப்பால் வாழ்வில வெற்றிக் கனியை ருசிக்கும் கன்னி ராசியினரே, இந்த மாதம் நீங்கள் முயற்சி செய்யும் காரியங்கள் வெற்றியை தரும். பணவரத்து வழக்கத்தை விட அதிகரிக்கும். பெண்களுக்கு சாதூர்யமாக பேசி எல்லா காரியத்தையும் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். பொறுப்புகள் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு அனுகூலமான திருப்பங்கள் உண்டாகும். பாராட்டும், பணமும் உங்கள் உள்ளத்தை உற்சாகப் படுத்தும். மாணவர்களுக்கு கல்விக்கான செலவு கூடும். சகமாணவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். எந்த முடிவையும் அவசரப்படாமல் நிதானமாக எடுக்க வேண்டும்.

## துலாம்

எந்த ஒரு சூழ்நிலையிலும் அனைவரையும் சரி சமமாக நடத்தும் துலா ராசியினரே இந்த மாதம் கோபம் மறைந்து நிதானம் அதிகரிக்கும். எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். குடும்பத்தில் வீண் பிரச்சனை ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கை துணையின் செயல்கள் உங்களுக்கு அதிருப்தி ஏற்படும் விதத்தில் இருக்கலாம். அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகள் நீங்கள் சொல்வதை கேட்டு நடப்பது ஆறுதலை தரும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகளுக்கான தடைகள் அகலும். பெண்களுக்கு கோபகத்தை குறைத்துக் கொள்வது நன்மை தரும். எதிர்ப்புகள் விலகும். பயணங்கள் சாதகமான பலன் தரும்.

## விருச்சிகம்

தேனீக்கள் போல் எப்போது சுறுசுறு வென்று இருக்கும் விருச்சிக ராசியினரே இந்த மாதம் மனதில் துணிச்சல் அதிகரிக்கும். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பீர்கள். எங்கும் எல்லோரிடத்திலும் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். உங்கள் உதவியை நாடி பலரும் வருவார்கள். சந்தோஷமான மன நிலை இருக்கும். புதிய பதவிகள் உங்களைத் தேடி வரும். பயணங்களால் நன்மை உண்டாகும். கலைத்துறையினருக்கு புகழும், பாராட்டும் கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படும். மாணவர்களுக்கு போட்டி, பந்தயங்களில் துணிச்சலுடன் ஈடுபட்டு சாதகமான நிலை காண்பீர்கள். ஊக்கத்துடன் படிப்பது நல்லது.

## தனுசு

தனது நேர்மையால் அனைவரையும் கவர்ந்திழுக்கும் தனுசு ராசியினரே இந்த மாதம் பணவரத்து அதிகரிக்கும். எடுத்த காரியத்தை செய்து முடிக்க இருந்த தாமதம் நீங்கும். தொழில் வியாபாரம் வேகமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாவது ஆறுதலை தரும். புதிய ஆர்டர்கள் கிடைப்பது வேகமெடுக்கும். பங்குதாரர்களிடம் இருந்து வந்த பிரச்சனைகள் அகலும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. கணவன் மனைவிக்கிடையே மன மகிழ்ச்சி ஏற்பட அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துவது நன்மையை தரும். வழக்கு விவகாரங்களில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது.

## மகரம்

எடுத்த காரியத்தை முடிக்காமல் அடுத்த காரியத்தை பார்க்காத மகர ராசியினரே இந்த மாதம் மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பாக நடக்கும். வியாபாரம் தொடர்பான பயணங்கள் செல்வதன் மூலம் கூடுதல் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். தொழிலை விரிவுபடுத்த ஆலோசனைகளை மேற்கொள்வீர்கள். பங்குதாரர்களிடம் இருந்து வந்த பிரச்சனைகள் அகலும். குடும்பத்தில் சந்தோஷம் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களால் அதிகப்படி வருமானம் இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சுமூகமான உறவு காணப்படும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக பாடுபடுவீர்கள்.

## கும்பம்

எந்த விஷயத்தையும் நிதானமாக அணுகும் கும்ப ராசியினரே இந்த மாதம் அடுத்தவர்களால இருந்து வந்த வீண் பிரச்சனைகள் அகலும். வாகனங்களில் செல்லும் போதும் பணிபுரியும் இடத்தில் ஆயுதங்களை கையாளும் போதும் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் சற்று விழிப்புடன் இருப்பது நல்லது. பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. குடும்பத்தில் இருந்து வந்த கருத்து வேற்றுமை நீங்கும். வீண் வாக்குவாதங்களை அகலும்.

கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வீர்கள். சகோதரர்களுடன் கருத்து வேற்றுமை நீங்கும்.

## மீனம்

சுயநலமில்லாத வாழ்க்கையை தாரக மந்திரமாக கொண்ட மீன ராசியினரே இந்த மாதம் செலவுகள் குறையும். பணவரத்து அதிகரிக்கும். எதையும் எதிர்த்து நிற்பதை தவிர்த்து அனுசரித்து செல்வது முன்னேற்றத்திற்கு உதவும். தொழில், வியாபாரம் சற்று நிதானமாக நடந்தாலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். தொழிலை விரிவுபடுத்துவதற்கான வேகம் கூடும். சரக்குகளை வாங்கும்போது கவனித்து வாங்குவதும் பாதுகாப்பாக வைப்பதும் நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபப்படாமல் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நல்லது. சகோதரர் வகையில் உதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Security Alarm
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au


Transco™
CARGO
=
#1
FREIGHT
FORWARDER
FROM AUSTRALIA TO SOUTH ASIA
THE ONLY COMPANY WITH WEEKLY SHIPMNTS TO SRI LANKA
ONLINE TRACKING
SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
LIVE CHAT ON WEBSITE
TRANSCO APP
We love to deliver
IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT
Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield
206-208 Discovery Road
Dandenong South
(03) 9703 2255
45 Adrian Rd
Campbellfield
(03) 9357 7228
SYDNEY - 02 9897 0004
PERTH - 08 9452 7707
BRISBANE - 07 3219 0203
CANBERRA - 02 62821905
TASMANIA - 03 90174167
ADELAIDE - 08 8322 8825
DARWIN - 08 79790002
1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU